437

580

தெய்வத் தமிழ் வாசகம்

மூன்றாம் புத்தகம்

437

(மூன்றாம் வகுப்பு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1940
MADRAS

V.C. வேங்கடேசன் & கோ
பி.டி. மதராஸ்

தெய்வத் தமிழ் வாசகம்

1415

மூன்றும் புத்தகம்

(மூன்றும் வகுப்பு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 JAN 1940
MADRAS

'வித்வான்' - ஐ. நடேசபிள்ளை,
பொன்னேரி.

1411
494·8:186

வெளியிடுவோர்:

V. C. வேங்கடேசன் கம்பெனி,

P. T., மதராஸ்.

காபி ரைட்] 1939 [விலை அணு

THE
KESARI PRINTING WORKS,
MADRAS.

FOREWORD

The author of the present series, **Mr. A. Natesa Pillai**, a veteran educationist and a public spirited gentleman, has taken time by the forelock and immediately after the publication of the **new syllabus in May 1939**, drawn up by a special committee of experts appointed by the Department of Education, Madras, for use in Elementary Schools, has prepared and published another set of Tamil Primers in accordance with the scheme of studies prescribed in it. They are decidedly an improvement on the previous set of Readers by the same author, "ARAN TAMIL VASAGAMS" which proved so popular and successful that they ran into several editions. The present series, "**Deiva Tamil Vasagam**" are the result of much thought, labour and care and have been prepared with a thorough understanding of the psychology of little children and with the set purpose of making a child a permanent literate by the time he or she passes out his or her V Standard. The illustrations are splendid—a very valuable and rare achievement in the Indian Press—and the print distinct and neat. I wish this series of Readers all the success they deserve and feel confident that they will more than fulfil the great purpose for which they are intended.

PONNERI,
1—11—1939.

(Sd.) A. E. CHARLES, B.A., L.T.,
J. D. I. of Schools, Ponneri Range.

முன்னுரை

தெய்வத் தமிழ் வாசகம் என்னும் இப்பாட புத்தக வரிசை (கல்வி இலாகா அதிகாரிகளால் 1939 மேமீ இல் புதிதாக அமைக்கப் பட்ட) ஆரம்பப் பாடசாலே பாட திட்ட முறையை முழுதும் பின் பற்றி எழுதப்பட்டிருக்கின்றது. இது மூன்றும் வகுப்புக் குழந்தைகட் குரிய மூன்றும் புத்தகமாகும்.

இம்மூன்ருவது புத்தகம் "மாணவர்களின் பருவத்திற் கேற்ற வாறு தெரிந்த, பேச்சில் உபயோகப்படுகிற மொழிகளேக் கற்பிக்க" கருவியாக அமைக்கப்பட் டிருக்கிறது. இப் புத்தகம் படித்து முடித்த மாணவன் "சுமார் 500 மொழிகளேயும் அவைக ளடங்கிய சிறு வாக்கி யங்களேயும்" படங்களின் மூலமாயும் சம்பாஷணே மூலமாயும் கற்றவ ஞவான்.

இப்புத்தகத்தைக் கண்ணுறுவோர், இது பள்ளி யாசிரியர்கட்கும், மாணவர்கட்கும் பெரிதும் இன்றி யமையாததா யிருக்கு மென்பதைச் செவ்விதின் உணர்வார்கள். ஆகவே, கல்வி யதிகாரிகளும் பாடசாலேத் தலேவர்களும் ஆசிரியர்களும் இதை ஆதரவு செய்து என்னேப் பின் னும் ஊக்குவார்களென நம்புகிறேன்.

இவ் வாசக வரிசையை நன்கு பார்த்து மதிப்புரை தந்த திருவாளர் A. E. சார்லஸ் அவர்கள், B.A., L.T. (Junior Deputy Inspector of Schools, Ponneri Range) பதிப்பித்து வெளி யிட்ட V. C. வேங்கடேசன் கம்பெனியார் ஆகியவர்களுக்கு என் நன்றி உரியது.

எல்லாம் வல்ல இறைவனுடைய இணேயடிகட்கு இவைகளே யரிச்சிக்கும் என்கடன் பணிசெய்து கிடப்பதே.

தில்லே விலாசம்
பொன்னேரி,
1—10—1939.

இங்ஙனம்,
ஐ. நடேசன்,
தமிழன்.

பொருளடக்கம்

எண்	பாடம்	பக்கம்
1	தெய்வம் உண்டு	4
2	அறிவே சிறந்தது	7
3	குயில்	9
4	பெயரும் வினையும்	12
5	மைனாவும் முயலும்	15
6	சம்பந்தர்	18
7	யானை	22
8	அதிகமான்	25
9	ஊரைக் காத்த உத்தமன்	28
10	மயில்	31
11	இராஜா தேசிங்கு	34
12	துருவன்	38
13	நீர்த் தோட்டி	41
14	திறமையுள்ள நாய்	45
15	நல்ல கள்ளன்	48
16	கழுதை	52
17	குரு பக்தி	55
18	பரதன்	59
19	ஈ தரும் இனிமை	62
20	புகை வண்டி	66

(பக்கம்-8) சிவபெருமான் பழத்தைக் கணபதிக்குக் கொடுத்தார்

உ

தெய்வத் தமிழ் வாசகம்

பயிற்சி 1.

(கோடுள்ள இடத்தில் தகுந்த சொல் அமைக்க)

முருகன் வேலை செய்கிறான்.

வள்ளி பாட்டு ——.

மனிதர்கள் வீட்டில் ——.

மாடு புல்லை ——.

வாத்துக்கள் நீரில் ——.

தகப்பனார் பணம் ——.

வள்ளி பாடம் படிக்கிறாள்.

—— தெருவில் போகிறார்கள்.

—— வண்டியை இழுக்கிறது.

—— வண்டியைச் செய்கிறான்.

—— பால் தருகின்றன.

—— பாடம் கற்பிக்கிறார்.

—— சாதம் ஊட்டுகிறார்.

—— கும்மி அடிக்கிறார்கள்.

—— இலங்கைக்குப் போனான்.

பயிற்சி 2.

(கோடுள்ள இடத்தில் தகுந்த சொல் அமைக்க)

நான் வேலை செய்கிறேன்.
நாம் பாடம் ——.
நாங்கள் கணக்குப் ——.
நீ பாட்டு ——.
நீர் உண்மை ——.
நீங்கள் தருமம் ——.
அவன் ஏர் ——.
மாடுகள் வயலில் ——.
பொன்னி சமையல் ——.
மனிதர் வேடிக்கை ——.
பூ அழகாய் ——.
நான் பள்ளிக்கூடம் போகிறேன்.
—— வேலை செய்கிறாய்.
—— மெய் பேசுவோம்.
—— வீட்டுக்குப் போகிறோம்.
—— பாடம் படிக்கிறீர்.
—— பாட்டு பாடுகிறீர்கள்.

பயிற்சி 3.

(கோடுள்ள இடத்தில் தகுந்த சொல் அமைக்க)

கந்தன் புத்தகம் ——.
முருகன் புத்தகத்தை ——.
புத்தகத்தைக் கையால் ——.
முத்தன் என்னோடு ——.
அழகப்பன் முருகனுக்கு ——.
தம்பி ஊரிலிருந்து ——.
முருகனது எருது ——.

பெட்டியில் பணம் ——.
நமக்கு —— நிழல்தரும்.
விறகு வெட்டி —— வெட்டுகிறான்.
நாற்காலி —— செய்யப்படும்.
வேர் —— சேர்ந்தது.
—— தண்ணீர் விடவேண்டும்.
பழம் —— உதிர்ந்தது.
—— வேர் பூமிக்குள் இருக்கும்.
காய் —— காய்க்கிறது.

பயிற்சி 4.

(கோடுள்ள இடத்தில் தகுந்த சொல் அமைக்க)

நான் நேற்று போனேன்.
நான் இப்பொழுது போகிறேன்.
நான் நாளைக்குப் போவேன்.
நீ முன்பு பார்த்தாய்.
நீ இப்போது பார்க்கிறாய்.
அவன் சென்ற மாதம் வந்தான்.
அவன் இவ்வேளை வருகிறான்.
அவன் அடுத்தநாள் வருவான்.
முன் காலத்தில் ஒரு அரசன் ——.
கடவுள் இப்பொழுதும் ——.
நாளைக்கு நான் ஊருக்குப் ——.
நான் இப்போது ஆற்றுக்குப் ——.
நேற்று நீ எங்கே ——?
முன் ஒரு நாள் நான் சென்னைக்குப் ——.
நீ இப்போது எங்கிருந்து ——?
நீ எப்போது ஊருக்குப் ——?
எனது நண்பன் நாளைக்குத்தான் ——.



1. தெய்வம் உண்டு.

தெய்வம்	ஐயம்	ஆராய்ச்சி
அறிவு	ஒழிய	தொடங்கினன்
தீர	குடிகொண்டது	முளைத்தது
ஏமாற்ற	நிழல்	யோசித்தான்
சந்தேகம்	கட்டுச்சோறு	திடமாக

ஒரு ஊரில் ஒரு மனிதன் இருந்தான். அவன் பெயர் குருவன். அவனுக்குப் படிப்பு தெரியாது. ஆனலும் அவனுக்கு மிகுந்த அறிவு உண்டு. எதையும் தீர யோசிப்பான். அவனை ஏமாற்ற எவராலும் முடியாது. அவன் எப்போதும் எதைப்பற்றியாவது ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பான்.

குருவனுக்கு சிறு வயது முதல் ஒரு பெரிய சந்தேகம் உண்டு. என்ன அது? 'தெய்வம் என்கிறார்களே அது எங்கே இருக்கிறது? எப்படி இருக்கிறது' என்னும் ஐயந்தான். குருவன் தன் ஐயத்தைப்பல பேரிடம் சொன்னான். அவர்கள் "கடவுள் உண்டு. அவர் இல்லாமல் எதுவும் இல்லை. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார். அவர் இல்லாத இடமே இல்லை" என்பார்கள்.

யார் எப்படிச் சொன்னாலும் குருவனுடைய ஐயம் ஒழிய வில்லை. கடவுள் இருந்தால் கண்ணுக்குத் தெரிய வேண்டுமே! கண்ணுக்குத் தெரியாத பொருள் இருக்கிறது என்று எப்படி நம்புவது' என்று மேலும் ஐயம் வளர்ந்தது. இதே எண்ணம் அவன் மனதில் குடிகொண்டது.

ஒரு நாள் குருவன் ஒரு ஊருக்குப் போனான். நடு வழியில் கொஞ்ச நேரம் தங்கினான். அவன் தங்கிய இடம் ஒரு ஆல மர நிழல். பக்கத்தில் ஒரு குளமும் இருந்தது. அதில் இறங்கிக் கட்டுச் சோறு உண்டான். திரும்பி வந்து மர நிழலில் படுத்தான்.

படுத்திருந்த குருவனுக்குப் பக்கத்தில் ஒரு ஆலம் பழம் விழுந்தது. அதை அவன் கையில் எடுத்தான். அவன் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினான். 'இந்தப் பழம் எதில் பழுத்தது? மரத்தில் பழுத்தது. மரம் எப்படி முளைத்தது? விதையிலிருந்து முளைத்தது. விதை எப்படிக் கிடைத்தது? விதை பழத்திலிருந்து கிடைத்தது. அப்படியானால் விதை முன்னே உண்டாயிற்றா? மரம்

முன்னே உண்டாயிற்று?' என்று வெகு நேரம் யோசித்தான்.

அப்போது தான் அவன் ஐயம் ஒழிந்தது. மரத்தையோ, விதையையோ முதலில் ஒருவர் உண்டாக்கியிருக்க வேண்டும். அவர் தாம் கடவுளாய் இருக்க வேண்டும். இது உண்மை தான். தெய்வம் உண்டு என்று திடமாக உணர்ந்து கொண்டான்.

பயிற்சி 5.

விளக்கம்:—ஊர் + இல் = ஊரில். எது + ஐ + உம் = எதையும். எது + உம் = எதுவும். எங்கு + உம் = எங்கும். சொன்னால் + உம் = சொன்னாலும். எ + படி = எப்படி. கொஞ்சம் + நேரம் = கொஞ்ச நேரம். கை + இல் = கையில்.

பிரித்து எழுது.

ஐயந்தான், நிறைந்திருக்கிறார், குருவனுடைய, மரநிழல் திடமாக.

சேர்த்து எழுது.

ஒழிய இல்லை, இருக்கிறது என்று, மனது இல், படுத்து இருந்த, அப்படி ஆனால், உண்டு ஆயிற்று.

வேறுமொழி கூறு.

படிப்பு, ஆராய்ச்சி, என்று, பின்பு, தெய்வம்.

ஒவ்வொரு சொல்லை ஒவ்வொரு தொடரில் சேர்த்து எழுது.

படிப்பு, ஏமாற்ற, இல்லாமல், எப்படி, தொடங்கினான்.

கேள்விகள்

1. குருவனுடைய சந்தேகம் யாது?
2. மரம் எதிலிருந்து உண்டாயிற்று?
3. விதை எதிலிருந்து உண்டாயிற்று?
4. கடவுள் உண்டு என்பது எப்படித் தெரிகிறது?

2. அறிவே சிறந்தது.

சிறந்தது	இருவரும்	கும்பிட்டு
மக்கள்	உலகத்தை	மும்முறை
மைந்தர்	முறை	வலம்வந்தான்
மனம்	விரைந்து	வெட்கம்
பிறந்தது	வாளா	வெற்றி

சிவபெருமானுக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. இருவரும் தந்தையின் அருகில் ஆடிக்கொண் டிருந்தார்கள். அப்போது சிவபெருமான் இரு மக்களையும் கூப்பிட்டார். தமது கையில் இருந்த ஒரு மாம்பழத்தைக் காட்டினர்.

உடனே இருமைந்தரும் "எனக்கு; எனக்கு" என்று கை நீட்டினர்கள். பெருமான் என்ன செய்வார்! யாருக்குக் கொடுப்பதென்று யோசித்தார். அப்போது அவர்மனதில் ஒரு எண்ணம் பிறந்தது. "குழந்தைகளே! என்னிடம் ஒரே பழந்தான் இருக்கிறது. இருவருக்கும் எப்படிக் கொடுக்க முடியும்? நீங்கள் உலகத்தை ஒரு முறை சுற்றிவர வேண்டும். எவன் முதலில் வந்து சேர்கிருனே அவனுக்கு இதைத் தருவேன்" என்ருர்.

சொன்ன அப்போதே முருகன் மயில்மீது ஏறினன். அது காற்றைப்போல் விரைந்து போயிற்று. கணபதி பேசாமல் நின்றிருந்தான். இவன் என்ன

செய்யப்போகிறான் என்று பரமசிவன் வாளா பார்த்திருந்தார்.

விநாயகன் இரண்டு கைகளையும் தலைமேல் சேர்த்தான்; கும்பிட்டுக்கொண்டே சிவபெருமானைச் சுற்றி வந்தான். மும்முறை வலம் வந்தான்; தந்தையின் பாதத்தில் விழுந்து எழுந்தான்; இருகைகளையும் நீட்டினான்; "அப்பா, மாம்பழத்தைக் கொடுங்கள்" என்றான்.

அப்போது சிவன் அவனைப் பார்த்து நீ "உலகத்தைச் சுற்றி வரவில்லையே? என்னைத்தானே சுற்றி வந்தாய்? உனக்கு எப்படிப் பழம் கிடைக்கும்" என்றார்.

"அப்பா, நீங்களே உலகம்; உலகமே நீங்கள். அல்லவா" என்றான் விநாயகன். அவர் உடனே பழத்தைக் கணபதிக்குக் கொடுத்தார்.

கொஞ்ச நேரத்துக்கெல்லாம் முருகன் வந்து சேர்ந்தான். கணபதியின் கையில் பழம் இருந்தது. "உனக்கு எப்படிக்கிடைத்தது" என்றான். நடந்ததை அப்படியே சொன்னான் விநாயகன். முருகன் மிகவும் வெட்கப் பட்டான்.

புத்தியுள்ளவன் வெற்றி யடைவான்.

பயிற்சி 6.

விளக்கம்:—தந்தை + இன் = தந்தையின். அ + போது = அப்போது. என் + இடம் = என்னிடம். பழம் + தான் = பழந்தான். காற்று + ஐ + போல் = காற்றைப்போல். பார்த்து + இருந்தார் = பார்த்திருந்தார். வெட்கம் + பட்டான் = வெட்கப் பட்டான்.

பிரித்தெழுது.

இருமைந்தர், கொடுப்பதென்று, நின்றிருந்தான், கொஞ்ச நேரம், புத்தியுள்ளவன்.

கூட்டி வரைக.

இரண்டு பிள்ளைகள். மா பழம். வெற்றி அடைவான்.

வேறுமொழி கூறு.

அருகில், கூப்பிட்டார், எண்ணம், தருவேன், பழம்.

ஒவ்வொரு சொல்லை ஒவ்வொரு தொடரில் பொருத்து.

சிவபெருமான், ஒரே, உலகத்தை, கணபதி, மயில்.

கேள்விகள்.

1. சிவனுக்கு எத்தனைப் பிள்ளைகள் ?
2. சிவபெருமான் கையில் இருந்தது என்ன ?
3. தந்தை பழத்தை யாருக்குத் தருவதாகச் சொன்னார் ?
4. பந்தயத்தில் யாருக்கு வெற்றி உண்டாயிற்று ?
5. இந்தக் கதையின் நீதி என்ன ?
6. மனம் மணம் இரண்டுக்கும் என்ன வேற்றுமை ?

---

3. குயில்.

பளபளப்பு	ஒலி	அடைகாக்கும்
பழுப்பான	கூவினால்	பொரிந்து
புள்ளிகளை	கேட்கக் கேட்க	குஞ்சுகள்
சோலைகளில்	இன்பமாய்	மாறுபாடு
குளிரும்	வகை	தொடங்கும்
வெப்பமும்	வேறொரு	கொத்திக் கொத்தி
சமமான	வெகு நயம்	சிறப்படைகிறது
அதிகாலை	பெரும்பாலும்	குணத்தால்
குரல்	நினைத்துவிடும்	உயர்வு

குயில் என்பது ஒரு பறவை. அது காக்கையைப் போலவே இருக்கும். ஆனால், கறுப்பாய் இராது. சிறிது நீல நிறமாய் இருக்கும். ஆண்குயில் நீலம் கலந்த கறுப்பில் பளபளப்பு உடையது. அதன் கண் சிவந்தது. அதற்கு வால் இறகு நீண்டிருக்கும். பெண் குயில் பழுப்பான நிறத்தில் வெள்ளைப் புள்ளிகளை யுடையது.

குயில் சோலைகளில் வாழும். அதிலும் மாஞ் சோலையே அதற்கு விருப்பமான இடம். அது பழங் களைத்தின்னும். குளிரும் வெப்பமும் சமமான இடத் தில் குயில் அதிகம். அதிகாலையில் குயில் அதிகமாகக் கூவும். வெய்யில் அதிகமானால் அதன் குரல் ஒலியும் அதிகப்படும். குயில் கூவினால் கேட்கக் கேட்க இன்ப மாயிருக்கும்.

குயிலின் வகை மூன்று. அவற்றுள் ஒரு வகை 'குயில், குயில்' என்று கத்தும். மற்றொருவகை 'கூ, கூ' எனக் கூவும். வேறொருவகை 'க்ரீ, க்ரீ' என்று கூவும். குயில் எப்படிக் கூவினாலும் செவிக்கு இனி மையாகவே இருக்கும். அதன் குரல் வெகு நயம்.

மற்ற பறவைகளைப் போல் குயில் கூடு கட்டுவ தில்லை. வேறு சிலவற்றின் கூடுகளில் அது முட்டை யிடும். அதிலும் காக்கையின் கூட்டைக் கண்டுதான் முட்டை இடும். குயிலின் முட்டையை அறியக் காக்கை யால் முடியாது. தனது முட்டை என்றே நினைத்து விடும். ஆகையால், காக்கை எல்லா முட்டைகளையும் அடைகாக்கும்.

முட்டைகள் எல்லாம் பொரிந்து குஞ்சுகளாகும். அப்போது காக்கைக் குஞ்சுக்கும் குயிலின் குஞ்சுக்கும் மாறுபாடு தெரியாது. குஞ்சுகள் கத்தத் தொடங்கும்போதுதான் தெரியும். வேறுபாடு தெரிந்த பிறகு காகம் குயிலின் குஞ்சுகளைக் கொத்திக் கொத்தித் துரத்தும்.

குயில் பார்வைக்கு அழகாயிராது. ஆனாலும் குரலால் சிறப்படைகிறது. அதுபோல நாமும் அழகாயில்லா விட்டாலும் குணத்தால் உயர்வு அடைய வேண்டும்.

பயிற்சி 7.

விளக்கம் :—கறுப்பு + ஆய் = கறுப்பாய். பழுப்பு + ஆன = பழுப்பான. குளிர் + உம் = குளிரும். கேட்க + கேட்க = கேட்கக் கேட்க. மற்று + ஒரு = மற்றொரு, பார்வை + கு = பார்வைக்கு.

பிரித்து எழுது.

நீண்டிருக்கும், புள்ளிகளையுடையது, மாஞ்சோலை, அதிகப்படும், குஞ்சுகளாகும்.

கூட்டி எழுது.

விருப்பம் ஆன, குளிர்வெப்பம், இன்பம் ஆய், இனிமை ஆக, அழகாய் இராது.

வேறுமொழி எழுது.

பறவை, விருப்பம், செவி, நினைத்து, மாறுபாடு.

ஒவ்வொரு சொல்லை ஒவ்வொரு தொடரில் கூட்டி எழுது.

கறுப்பாய், அதன், வாழும், கூவும், பளபளப்பு.

கேள்விகள்.

1. குயில் எதைப்போல் இருக்கும்?
2. குயில் எங்கே வாழும்?
3. குயிலுக்கு உதவி செய்யும் பறவை எது?
4. குயிலுக்கு எதனுல் சிறப்பு உண்டாகிறது?

---

4. பெயரும் வினையும்.

வினை	இடப்பட்ட	விலங்கு
குறிப்பிட	அடையாளம்	தாவரம்
ஒவ்வொரு	இந்திரன்	இனித்தது
பொருள்	தேவர்கள்	தனித்தனி

நாம் நமது கண்களால் எவ்வளவோ பொருள்களைப் பார்க்கிறோம். ஒவ்வொரு பொருளையும் குறிப்பிட ஒவ்வொரு சொல் உண்டு. அந்தச் சொல் பெயர்ச் சொல் எனப்படும். ஏன் அப்படிச் சொல்லப்படுகிறது? அந்த ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பொருளின் பெயர்; ஆகையால்தான் பெயர்ச் சொல் எனப்படுகிறது.

இப்போது என்கையில் இருப்பது என்ன? இது ஒரு புத்தகம். கையில் உள்ள பொருளைக் குறிக்கும் சொல் புத்தகம் என்பது அல்லவா! ஆம்; புத்தகம் என்பதுதான் இப்பொருளுக்கு இடப்பட்ட பெயர். ஆகையால், புத்தகம் என்னும் சொல் பெயர்ச்சொல்.

பெயர் என்ருல் ஒன்றை அறிவதற்கு அடையாள மாக இடப்பட்ட குறி. இக் குறி எல்லாவற்றிற்கும் உண்டு. இங்கே சில பெயர்களைச் சொல்கிறேன் பாருங் கள். தெய்வம், கடவுள், சாமி. இந்திரன் இவை தேவர்களின் பெயர்கள்.

அழகப்பன், பொன்னன், மன்னன், பையன், கிழவி இவைகள் மனிதர்களின் பெயர்கள்.

சிங்கம், யானை, பூனை, பசு, ஆடு இவை விலங்கு களின் பெயர்கள்.

கிளி, கழுகு, மயில், குயில், காக்கை இவை பறவை களின் பெயர்கள்.

மரம், சேடி, கோடி, புல், பூண்டு இவை தாவரங் களின் பெயர்கள்.

ஒவ்வொன்றின் பெயரைக் குறிக்கச் சொற்கள் இருப்பதுபோல, அவற்றின் வேலையைக் குறிக்கும் சொற்களும் உண்டு. அவை வினைச் சோல் எனப்படும். வினைச்சொல் என்ருல் என்ன? வினை என்ருல் வேலை. ஆகையால், வேலையைக் குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படுகிறது. மனிதன் ஓடுகிருன் என்பதில் மனி தன் என்பது பெயர்ச்சொல். மனிதன் செய்யும் வேலை என்ன ? ஓடும் வேலை. அந்த வேலையைக் குறிக்கும் சொல் எது ? ஓடுகிருன் என்னும் (வேலையைக் குறிக் கும்) வினைச்சொல். இப்படிப்பட்ட வந்தான், படிக்

கிருள், ஆடும், வளரும், காய்க்கும், இனித்தது, காட்டு கிறது முதலியவை வினைச் சொற்கள்.

இனி நீங்கள் சொற்றொடரில் உள்ள பெயரையும் வினையையும் தனித்தனி அறிந்து கொள்ளலாம் அல்லவா !

பயிற்சி 8.

விளக்கம்:—ஒரு + ஒரு = ஒவ்வொரு. தனி + தனி = தனித்தனி. கை + இல் கையில். அழகு + அப்பன் = அழகப்பன். சொல் + தொடர் = சொற்றொடர்.

பிரித்து எழுது.

கண்களால், எவ்வளவோ, வேலையை, கொள்ளலாம்.

கூட்டி எழுது.

கையில் இருப்பது, குறி உண்டு.

வேறுமொழி எழுது.

குறி, பார்க்கிறோம், போல, வேலை, உள்ள.

பெயர்ச்சொல், வினைச்சொல் கூறுக.

பொன், படிப்பான், மயில், வீடு, கண்டேன், செய்.

———



5. மைனாவும் முயலும்.

மைனா	தூரத்தில்	கொல்லும்
பொந்து	வழக்கை	தொழிலை
வாழ்ந்திருந்தது	பகருங்கள்	அடியோடு
புகுந்து	நெருங்கி	கொலை
அகன்றுவிடு	அடடா	நிரம்பிய
ஏகமாட்டேன்	நியாயம்	பாய்ச்சல்
பொதுவான	தீர்ப்பேன்	தாவியது
பயப்பட்டன	அஞ்சுகிறோம்	போயின

ஒரு காட்டில் பெரிய மரம் ஒன்றிருந்தது. அதில் ஒரு பொந்து உண்டு. அப் பொந்தில் ஒரு மைனா வாழ்ந்திருந்தது. மைனா ஒரு நாள் இரைதேட

வெளியே போயிற்று. அப்போது ஒரு முயல் ஓடிவந்தது. பொந்தில் புகுந்து மறைந்திருந்தது.

மாலையானதும் மைனு திரும்பி வந்தது. முயலைப் பார்த்தது. "ஐயா, முயலே, இது நான் வசிக்கும் இடம். நீ ஏன் இங்கே வந்தாய். உடனே அகன்றுவிடு." என்றது. அப்போது முயல் "நான் ஏகமாட்டேன். இது எல்லோருக்கும் பொதுவான இடம்" என்றது.

இப்படி இரண்டும் சண்டை செய்யத் தொடங்கின. முடிவில் இரண்டும் கூடி ஒரு பூனை யிடத்துக்குப் போயின. அந்தப் பூனை கண்களை மூடி யிருந்தது. அதனுல், தவம் செய்வதாக முயலும் மைனுவும் நினைத்துவிட்டன. ஆனுலும் பக்கத்தில் போகப் பயப்பட்டன. தூரத்தில் இருந்தே வழக்கைக் கூறின.

வழக்கைக் கேட்ட பூனை "நீங்கள் சொல்வது எனக்குக் கேட்கவில்லை. நான் வயது சென்ற கிழவன். ஆகையால், பக்கத்தில் வந்து பகருங்கள்" என்றது. அவைகளும் கொஞ்சம் நெருங்கி வந்து சொல்லின. அப்போதும் பூனை "அடடா, பாதி கேட்டது. பாதி கேட்க வில்லையே! நான் எப்படி நியாயம் தீர்ப்பேன்" என்றது.

அதைக் கேட்ட மைனு "பூனையே, உன் அருகில் வர நாங்கள் அஞ்சுகிருேம்" என்றது. உடனே பூனை "ஏன் பயப்பட வேண்டும்? நான் தவம் செய்கிறேன். கொல்லும் தொழிலை அடியோடு விட்டேன். கொலை

செய்கிறவர்களைக் கண்ணாலும் பார்க்க மாட்டேன்" என்றது.

அந்தச் சொல்லை நம்பிய மைனாவும் முயலும் அருகில் போயின. பூனை ஒரே பாய்ச்சல் பாய்ந்தது. இரண்டையும் பிடித்துக் கடித்துப்போட்டது.

ஆகையால், கெட்டவர்கள் சொல்லை நம்பக் கூடாது.

பயிற்சி 9.

விளக்கம்:—ஒன்று + இருந்தது = ஒன்றிருந்தது. செய்வது + ஆக = செய்வதாக. மைனா + உம் = மைனாவும். பயம் + பட்டன = பயப்பட்டன. கேட்க + இல்லை = கேட்கவில்லை. அடி + ஓடு = அடியோடு.

பிரித்து எழுது.

வாழ்ந்திருந்தது, மாலையானதும், மூடியிருந்தது.

கூட்டி எழுது.

வசிக்கும் இடம், பூனை இடம், தூரத்தில் இருந்து,

வேறுமொழி எழுது.

காட்டில், பகருங்கள், அருகில், போயின, கூறின.

ஒவ்வொரு சொல்லையும் தனித்தனி ஒவ்வொருதொடரில் வைத்து எழுது.

பெரிய, வசிக்கும், பொதுவான, இரண்டும், அஞ்சுகிறோம், அடியோடு.

கேள்விகள்.

1. மைனா எங்கே வாழ்ந்தது?
2. மைனா எதனோடு சண்டை செய்தது?
3. மைனாவின் வழக்கு யாரிடம் போயிற்று?
4. எது தவம் செய்வதுபோல் இருந்தது?
5. மைனாவின் கதையால் நீ அறிந்தது என்ன?

6. சம்பந்தர்

அந்தணர்	தடுக்கவேயில்லை	சுந்தரம்
வணங்கும்	தீப்பிடிக்க	தந்திரம்
திருவடி	சுரநோய்	துதிக்க
போற்றும்	மருந்து	நீறு
தங்கினர் [கள்	மந்திரம்	பூசினர்
பொருமைக்காரர்	நீங்கவில்லை	ஒழிந்தது
கோள்	மகாராணி	பெருமை
வெறுத்தான்	அரண்மனை	உணர்ந்தான்
கொளுத்தினர்கள்	வானவர்	புகழ்

சோழ நாட்டில் சீகாழி என்று ஒரு ஊர் உண்டு. அவ்வூரில் ஒரு அந்தணர் இருந்தார். அவர் பெயர் சிவபாத இருதயர். அவருடைய மனைவியின் பெயர் பகவதி. அவர்களுக்கு ஒரு குழந்தை பிறந்தது. அது ஆண் குழந்தை. அதற்கு அழகும் அறிவும் அதிகமாக உண்டு. அதன் பெயர் ஞான சம்பந்தன்.

அக் குழந்தை சிறு வயதிலேயே இனிமையாகப் பாடும்; கடவுளை வணங்கும். காலையும் மாலையும் கோவிலுக்குப் போகும். தெய்வத்தின் திருவடியை மறப்பதேயில்லை.

நமது ஞான சம்பந்தர் ஒரு சமயம் மதுரைக்குப் போனார். அங்கே ஒரு இடத்தில் தங்கினர். அந்த ஊர்க்கு அரசன் பாண்டியன். அந்த ஊரில் சில பொருமைக்காரர்கள் இருந்தார்கள். அவர்கள் அரசனிடம் கோள் கூறினர்கள். ஆதலால், அரசன் சம்



(பாண்டியன் உடம்பில் திருநீறு பூசினர்)

பந்தரை வெறுத்தான். ஆனாலும் மந்திரியும் அரசியும் வெறுக்கவில்லை விரும்பினர்கள்.

பொருமைக்காரர்கள் சம்பந்தர் இருந்த இடத்தைக் கொளுத்திஞர்கள். அது அரசனுக்கும் தெரியும்; அரசன் அதைத் தடுக்கவே இல்லை. பின்பு என்ன நடந்தது தெரியுமா? சம்பந்தர் இருந்த இடம் தீப்பிடிக்கவே யில்லை. அதற்குப் பதிலாகப் பாண்டியனுக்குச் சுரநோய் வந்தது.

அதற்காக எவ்வளவோ மருந்து கொடுத்தார்கள்; மந்திரம் செய்தார்கள்; எதஞலும் நோய் நீங்கவில்லை. பின்பு மந்திரியும் மகாராணியும் வந்து சம்பந்தரை வேண்டிஞர்கள். அவரும் உடனே அரண்மனைக்குப் போஞர். அச் சிறுவர் போய் என்ன செய்தார்!

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான்
[திருநீறே

என்று பாடிஞர்; பாண்டியன் உடம்பில் திருநீறு பூசிஞர்.

உடனே பாண்டியனுக்கு நோய் ஒழிந்தது. அப்போதுதான் அரசன் குழந்தையின் பெருமை அறிந்தான். பொருமைக்காரரின் கோளையும் உணர்ந்தான். அது முதல் சம்பந்தருக்கு எங்கும் புகழ் ஏற்பட்டது.

பயிற்சி 10.

விளக்கம்:—நாடு + இல் = நாட்டில். அழகு + உம் = அழகும். திரு + அடி = திருவடி. சுரம் + நோய் = சுரநோய்.

பிரித்து எழுது.

இனிமையாக, அரசனிடம், பதிலாக, சம்பந்தரை.

கூட்டி எழுது.

அவர் உடைய, அழகு அறிவு, அரசன் இடம், நீங்க இல்லை.

சொற்றொடரை முடிக்க.

1. சீகாழி சோழ நாட்டில் ——.
2. சம்பந்தர் ஒரு சமயம் மதுரைக்குப் ——.
3. பாண்டியனுக்கு சுரநோய் ——.
4. சம்பந்தர் பாண்டியன் உடம்பில் திருநீறு ——.
5. சம்பந்தருக்கு எங்கும் புகழ்——.

கேள்விகள்.

1. கடவுளின் வேறு ஒரு பெயர் யாது?
2. ஞானசம்பந்தர் எந்த ஊரில் பிறந்தார்?
3. சம்பந்தருடைய பெற்றோர் யார்?
4. மதுரையில் சம்பந்தருக்கு ஏற்பட்ட துன்பம் என்ன?
5. பாண்டியனுடைய நோய் எப்படி நீங்கியது?



7. யானை

அனைத்தினும்	முறித்துவிடும்	பாதுகாப்பவன்
உற்றுப்பார்	உறுதியானவை	மாவுத்தன்
தும்பிக்கை	கோட்டை	யானைப்பாகன்
துதிக்கை	கதவு	வஞ்சகம்
தந்தங்கள்	இடித்து	குறும்பு
பருத்திருக்கின்றன	வீரத்துடன்	சர்க்கஸ்
சொறசொறப்பாய்	ஊர்வலம்	

இந்தப் படத்தைப் பார். இது ஒரு மிருகம். இதன் பெயர் யானை. இது காட்டில் வாழ்வது. காட்டில் உள்ள மிருகங்கள் அனைத்தினும் பெரியது இது தான்.

யானையை நன்றாய் உற்றுப் பார். அதன் முகத்தில் நீளமாய் ஒன்று தொங்குகிறது அல்லவா! அது தான் தும்பிக்கை. அதைத் துதிக்கை என்றும் சொல்வது உண்டு. வாயின் இருபக்கத்திலும் இருப்பவை தந்தங்கள். தந்தத்தின் நிறம் வெள்ளை. பெண் யானைக்குத் தந்தம் இல்லை.

யானையின் காதுகளைப் பார். அவை மிக அகலமானவை. ஆனால், யானையின் கண்கள் மிகச் சிறியவை. அதன் கால்களைப்பார். உரலைப் போல் பருத்திருக்கின்றன. வால் துடைப்பத்தைப் போல் இருக்கும்.

யானையின் கால்களில் நகமும் உண்டு. யானைமிக உயரமாக வளரும். அது கறுப்பு நிறமாயிருக்கும். அதன் உடல் சொற சொறப்பாயிருக்கும்.

துதிக்கை யானைக்குக் கையாக உதவுகிறது. அதனால் யானை மரக்கிளைகளையும் முறித்துவிடும். அதன் தந்தங்கள் மிகவும் உறுதியானவை. யானை தனது தந்தத்தால் கோட்டைக் கதவுகளையும் இடித்து உடைத்து விடும்.

யானை அரிசி, கரும்பு, தேங்காய், தழை முதலியவைகளைத் தின்னும். அது ஆயிரம் ரூபாய்க்கு மேலும் விலைபோகும். யானை, அரசர்களிடம் இருக்கும். அது வீரத்துடன் சண்டை செய்யும். அரசர்கள் யானையின் மீது ஏறி ஊர்வலம் வருவார்கள்.

பெரிய கோயில்களிலும் யானை உண்டு. யானையைப் பாதுகாப்பவனுக்கு மாவுத்தன் என்று பெயர். அவனை யானைப்பாகன் என்றும் கூறலாம்.

யானை மிகவும் வஞ்சகம் உள்ளது. அதனிடம் விளையாட்டுக்காகவும் குறும்பு செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் குறும்புக்குப் பதில் குறும்பு செய்துவிடும். யானையை சர்க்கஸில் பார்க்கலாம். "யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" என்பது பழமொழி.

யானை, இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்.

பயிற்சி 11.

விளக்கம்:—அகலம் + ஆனவை = அகலமானவை. பருத்து + இருக்கின்றன = பருத்திருக்கின்றன. மரம் + கிளை = மரக்கிளை. அதன் + இடம் = அதனிடம். சர்க்கஸ் + இல் = சர்க்கஸில்.

பிரித்து எழுது.

உயரமாக, நிறமாயிருக்கும், அரசர்களிடம்.

கூட்டி எழுது.

காட்டில் உள்ள, சொல்வது உண்டு, வஞ்சகம் உள்ளது, மணி ஓசை.

சொற்றொடர்களை முடிக்க.

1. யானை காட்டில் வாழும் ——.
2. யானைக்கு ஒரு தும்பிக்கை ——.
3. யானையின் தந்தங்கள் வெண்மை ——.
4. யானையின் கால்கள் உரலைப்போல் ——.

கேள்விகள்.

1. யானையின் கண்கள் எப்படிப்பட்டவை?
2. யானைக்குக் காதுகள் எப்படி யிருக்கின்றன?
3. தும்பிக்கையின் வேறு பெயர் என்ன?
4. யானையிடம் ஏன் குறும்பு செய்யக் கூடாது?
5. யானை எவற்றைத் தின்னும்?



8. அதிகமான்

அளவின்றி	நீதி	அண்டிப்பிழைத்
வள்ளல்	தவறாமல்	வரலாறு [தார்
மழவர்குலம்	புலவர்	செய்யுள்
இனத்தவர்	பிராட்டி	அகமகிழ்ந்தான்
புயவலி	மதித்திருந்தார்கள்	மேலும் மேலும்
உபகாரி	வறுமை	கருநெல்லி
கருணை	உடன்பிறப்பு	ஆயுள்

வருகிறவர்களுக்கு அளவின்றிப் பொருள் தருகிறவன் வள்ளல். முன்காலத்தில் எத்தனையோ வள்ளல்கள் இருந்தார்கள். அவர்களுள் அதிகமான் நெடுமான் அஞ்சி என்பவன் ஒருவன். அதிகமான் மழவர் குலத்தில் பிறந்தவன். மழவர் என்னும் இனத்தவர் பெரிய வீரர்கள். புயவலி மிக்கவர்கள்.

அதிகன், தகடூருக்கு அரசன். பெரிய உபகாரி; மிகுந்த புகழுடையவன்; கல்வியும் அறிவும் உள்ளவன்; கற்றவரைக் காக்கும் கருணை உடையவன்; நீதி தவறாமல் அரசு செய்கிறவன்.

அதிகமான் காலத்தில் ஔவையார் என்ற ஒரு புலவர் இருந்தார். அப்புலவர் பெண்பிள்ளை. ஆகையால் ஔவைப் பிராட்டி என்றும் சொல்வது உண்டு. ஔவையார் மிகப் படித்தவர். அதற்கேற்ற அறிவும் உடையவர். இனிமையான பாட்டுக்கள் பாடுவார். ஆதலால், ஔவையாரை அரசர் மதித்திருந்தார்கள்.

புலவர்களுக்குவறுமை உடன்பிறப்பு. ஆகையால், ஔவையார் மன்னர்களை அண்டிப் பிழைத்தார். ஔவைக்கு அதிகனைப்பற்றிய வரலாறு தெரிந்தது. அவன்மீது ஒரு செய்யுள் பாடினார். அதை எடுத்துக் கொண்டு அவனிடம் போனார். அந்தக் கவியைக் கண்டு அதிகன் அகம் மகிழ்ந்தான்.

ஔவையாரை அதிகன் தன்னிடமே நிறுத்திக் கொண்டான். பாட்டி கூறும் புத்தியைக் கேட்டு நடந்து கொண்டான். அதனால், அவனுக்கு மேலும் மேலும் புகழ் வளர்ந்தது.

ஒரு நாள் அதிகன் வேட்டைக்குப் போனான். அங்கே ஒரு கரு நெல்லிக்கனி கிடைத்தது. அதை உண்பவர்களுக்கு ஆயுள் வளரும். ஆகையால், அதிகன் அப்பழத்தைப் பாட்டிக்குக் கொடுக்க விரும்பினான். உடனே திரும்பி வந்தான். பழத்தைக் கிழவியிடம்

கொடுத்தான். உண்ணும்படி வேண்டினுன். ஔவையார் அதை அருந்தினுர்.

அதிகன் அதைக் கண்டு களித்தான். "அம்மா, நீங்கள் அதிக நாள் வாழ்வீர்கள். அதற்காகத்தான் இப்பழத்தைக் கொண்டு வந்து கொடுத்தேன்" என்ருன். அதைக்கேட்டு ஔவையார் அதிகனேப் புகழ்ந்து மறுபடி பாடினுர்.

அதிகனுடைய ஈகைக் குணத்தைப் பார்த்தீர்களா! நம்மிடத்திலும் ஈகைக் குணம் இருக்கவேண்டும்.

பயிற்சி 12.

விளக்கம்:—அளவு + இன்றி = அளவின்றி. புகழ் + உடையவன் = புகழுடையவன். அதற்கு + ஏற்ற = அதற்கேற்ற. இனிமை + ஆன = இனிமையான. கிழவி + இடம் கிழவியிடம்.

பிரித்து எழுது.

மதித்திருந்தார்கள், தன்னிடம், அப்பழம்.

கூட்டி எழுது.

என்பவன் ஒருவன், கருணே உடையவன், அதை உண்டவர்.

சொற்றுெடரை முடிக்க

1. அதிகன் அளவின்றிக் கொடுக்கும் ——.
2. அதிகன் தகடூரை ஆண்ட ——.
3. ஔவையார் இனிமையான செய்யுள் ——.
4. ஔவையார் அதிகன் இடத்திலேயே ——.
5. அதிகமான் ஔவைக்குக் கருநெல்லிக்கனி ——.

கேள்விகள்.

1. எப்படிப் பட்டவர்களுக்கு வள்ளல் என்று பெயர்?
2. ஔவையார் காலத்தில் தகடூரின் அரசன் எவன்?

3. அரசர்கள் எதனுல் ஔவையாரை மதித்திருந்தனர்?
4. அதிகனுக்கு எதனுல் புகழ் வளர்ந்தது?
5. கருநெல்லிப் பழத்தினுல் என்ன நன்மை?



9. ஊரைக் காத்த உத்தமன்

பாண்டவர்	முறையாக	காலி வண்டி
வேத்திரகீயம்	இரையாவதோடு	கொதித்தெழுந்து
வனம்	மெதுவாகவும்	தாவு
அரக்கன்	கொடுமை	குத்து

முன்காலத்தில் பாண்டு என்று ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஐந்து பிள்ளைகள் உண்டு. அவர்கள் பெயர் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்பன. அவர்களைப் பாண்டவர் என்பது வழக்கம்.

பாண்டவர் பன்னிரண்டு வருஷம் காட்டில் வசித்தார்கள். அவர்களுடன் தாயாகிய குந்தியும் போயிருந்தாள். பாஞ்சாலியும் சென்றிருந்தாள். அவர்கள் வேத்திரகீயம் என்னும் வனத்தில் கொஞ்சநாள் தங்கினார்கள். அங்கே பகன் என்ற அரக்கன் ஒருவன் இருந்தான்.

வேத்திரகீயத்தில் சில அந்தணர்கள் வசித்திருந்தார்கள். அவர்கள் பகன் என்பவனுக்கு அடங்கியிருந்தார்கள். 'தினம் ஒரு மனிதன் பகனுக்கு உணவாக வேண்டும், ஒவ்வொரு வீட்டிலிருந்தும் முறையாக நாளும் வரவேண்டும். ஒரு ஆள் இரையாவதோடு ஒரு வண்டி உணவும் தரவேண்டும் என்ற ஏற்பாடு அமைந்திருந்தது. இதை வீமன் அறிந்தான். ஒருநாள் தானே உணவு வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றான்.

வீமன் மிகுந்த பலமுடையவன். சண்டை செய்வதில் கெட்டிக்காரன். அவன், போகும் வழியிலேயே வண்டியில் இருந்த சோறு முதலியவற்றைத் தின்றுவிட்டான். அதோடு மெதுவாகவும் போனான். பகனுக்குப் பசியின் கொடுமை மிகுந்தது.

காலி வண்டியுடன் வரும் வீமனைப் பகன் பார்த்தான். கோபம் கொண்டு எழுந்தான். ஒரே தாவு தாவினான். வீமனைப் பிடித்து ஒரு குத்து குத்தினான். வீமனும் பதிலுக்குக் குத்தினான். இப்படி இருவரும் வெகுநேரம் சண்டை செய்தார்கள். முடிவில் பகன் இறந்து விட்டான்.

வீமன் வெற்றியோடு திரும்பி வந்தான். வேத்திரகீய அந்தணர்களுக்கு அதிக களிப்பு உண்டாயிற்று. வீமனைப் புகழ்ந்தார்கள். வீமனால் எல்லோரும் பயம் நீங்கி வாழ்ந்தார்கள்.

ஊருக்கு உதவுகிறவனே உத்தமன்.

பயிற்சி 13.

விளக்கம்:—தாய் + ஆகிய = தாயாகிய. வசித்து + இருந்தார்கள் = வசித்திருந்தார்கள். உணவு + ஆக = உணவாக. ஏற்பாடு + உம் = ஏற்பாடும். பலம் + உடையவன் = பலமுடையவன்.

பிரித்து எழுது.

சென்றிருந்தாள், அடங்கியிருந்தார்கள், வண்டியுடன்.

கூட்டி எழுது.

வண்டியில் இருந்த, அரக்கன் ஒருவன், ஒருவன் இருந்தான்.

தொடர்களை முடிக்க.

1. பாண்டு என்பவன் ஒரு ——.
2. பாண்டுவுக்கு ஐந்து பிள்ளைகள் ——.
3. பகன் என்பவன் கொடிய ——.
4. வீமன் மிகுந்த பலம் ——.

கேள்விகள்.

1. பாண்டுவின் மக்கள் பெயர் என்ன ?
2. குந்தி என்பவள் யார் ?
3. பாஞ்சாலி என்பவள் எவள் ?
4. பகனுக்கு அடங்கி யிருந்தவர்கள் யார் ?
5. பகனைக் கொன்றவன் எவன் ?



10. மயில்

இறகுகள்	கொண்டை	விசிறிகள்
நீலம்	தோகை	மேகத்தை
மஞ்சள்	விரித்துக்கொண்டு	மகிழ்வு
பச்சை	முனையில்	திரண்டு
நீண்டது	வட்டம்	அகவுகிறது
உச்சியில்	கண்ணடி	தோட்டத்திலும்

மயில் பறவை இனத்தைச் சேர்ந்தது. அது மிக அழகானது. மயிலின் இறகுகள் பலவகை நிறமாய் இருக்கின்றன. அவை என்னென்ன நிறங்கள் தெரியுமா? நீலம், மஞ்சள், பச்சை முதலிய நிறங்கள் கலந்து இருக்கின்றன. சிறிது சிவப்பு நிறமும் உண்டு.

மயிலுக்குத் தலை சிறியது; ஆனாலும் கழுத்து நீண்டது. கால்களும் நீண்டிருக்கின்றன. மயிலின் உடல் பெரியது. இறக்கைகள் சிறியவை. ஆதனாலே தான் மயிலால் பறக்க முடிவதில்லை.

படத்தில் காணப்படும் மயில் இரண்டும் ஆண். ஆண் மயிலுக்குத்தான் தலையின் உச்சியில் கொண்டை உண்டு. வால் இறகும் நீண்டிருக்கும். மயிலின் வால் இறகுக்குத் தோகை என்று பெயர். ஒரு மயில் தன் தோகையை விரித்துக்கொண்டு ஆடுகிறது பார்.

தோகையின் முனையில் அழகான வட்டம் ஒன்று உண்டு. அதைக் கண்ணாடி எனப் பகர்வது உண்டு. அந்தக் கண்ணாடிகளைச் சேர்த்து விசிறிகள் செய்ய லாம். பெண் மயிலுக்கு நீண்ட தோகை இல்லை அல் லவா! ஆகையால், அது ஆடுவதில்லை. ஆடினாலும் நன்றாயிருக்குமா?

மயில் மேகத்தைக் கண்டால் மகிழ்வு அடையும். மழைக்காலத்தில் வானத்தில் மேகம் திரண்டிருக்கும் அல்லவா! அப்போது மயில் அடிக்கடி ஆடும். இவ்வளவு அழகான மயில் கத்தினால் யாருக்கும் பிடிக் காது. அது கத்துவதை அகவுகிறது என்பது வழக்கம்.

மயில் உள்ள இடத்தில் பாம்பு வராது. ஏன் தெரியுமா? மயில் பாம்பைக் கொத்திக் கொல்லும். மயிலைக் கோவிலில் வளப்பார்கள். பணக்காரர்கள் வீட்டுத் தோட்டத்திலும் வளர்ப்பது உண்டு.

பயிற்சி 14.

விளக்கம்:—என்ன + என்ன = என்னென்ன. தோகை + ஐ = தோகையை. கோவில் + இல் = கோவிலில்.

பிரித்து எழுது.

அழகானது, ஆடுவதில்லை, நன்றாயிருக்கும், பாம்பை.

கூட்டி எழுது.

பறவை இனம், கலந்து இருக்கின்றன, தலை உச்சி, வால் இறகு, பகர்வது உண்டு.

எதிர்மொழி எழுது.

சிறிது × பெரிது, நீண்டது, முடியும், ஆண், ஆடும், உண்டு.

கீழே பெரிய எழுத்தில் உள்ள சொல்லுக்குப் பதில் சொல் எழுது.

1. மயிலின் உடல் பெரியது.
2. தோகையின் முனையில் ஒரு வட்டம் உண்டு.
3. கண்ணாடி எனப் பகர்வது உண்டு.
4. மேகம் திரண்டு இருக்கும்.

கேள்விகள்.

1. மயிலுக்கு எதனால் அழகு அதிகம்?
2. ஆண் மயிலுக்கும் பெண் மயிலுக்கும் என்ன வேற்றுமை?
3. தோகை என்று எதற்குப் பெயர்?
4. எதற்குக் கண்ணாடி எனப் பெயர்?
5. மயில் எப்போது அடிக்கடி ஆடும்?
6. மயில், தோகை, ஆடும், இருக்கும், உடல், வட்டம், கலந்து, பகரும் பெயர்ச் சொற்கள் எவை? வினைச் சொற்கள் எவை?



11. இராஜா தேசிங்கு

ஜில்லா	ஏற்றுர்கள்	வேர்வை
பலம்	கடிவாளத்தை	குலுக்கினன்
நவாபு	தட்டு	புகுந்தது
பாதுஷா	வளைந்து	சாந்தமாக
சக்கரவர்த்தி	பெருமூச்சு	கப்பம்
முரட்டு	நுரை	விடை
தோற்றுர்கள்	வழிந்தது	ஒப்பு

தென் ஆற்காடு ஜில்லாவில் செஞ்சி என்று ஒரு தாலூகா உண்டு. அதை நெடுநாட்களுக்குமுன் தரணி சிங்கு என்னும் மன்னவன் ஆண்டான். அவன் டெல்லி மன்னனுக்குக் கீழடங்கியவன். அப்போது டெல்லியை ஷா ஆலம் என்னும் முகம்மதிய சக்கரவர்த்தி ஆண்டான். அவனிடத்தில் ஒரு குதிரை

இருந்தது. அது மிகவும் முரடானது. அதன் விலை பன்னிரண்டு ஆயிரம் ரூபாய். அதனால், அதற்குப் 'பாரஹ் ஆசாரி' எனப் பெயர். அதை அடக்கிச் சவாரி செய்ய ஒருவராலும் முடியவில்லை. ஆகையால், "குதிரையை அடக்கும் வீரன் ஒருவன் வேண்டும். அப்படிப்பட்ட வீரனுக்கு மிகுந்த பொருள் தருவேன்" என்றும் "அடக்கும் வீரமற்றுத் தோல்வியடைந்தவர்களைச் சிறையிலிடுவேன்" என்றும் எல்லா மன்னர்களுக்கும் ஷா ஆலம் எழுதித் தெரிவித்திருந்தான்.

அக்குதிரையை அடக்கப் பல மன்னவர்கள் சென்று தோற்றார்கள், சிறைத் தண்டனையை ஏற்றார்கள். அவர்களுள் தரணிசிங்கும் ஒருவன். தரணி சிங்குக்குப் பின் அவனுடைய தம்பியும் சென்று சிறையுண்டான்.

தரணி சிங்கு டெல்லிக்குப் போன இரண்டொரு மாதங்கட்குப் பின்பு அவனுடைய மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றாள். அது மிக அழகும் அறிவும் ஆண்மையும் நிறைந்து வளர்ந்தது. அப்பிள்ளையின் பெயர் தேசிங்கு. தேசிங்குக்குப் பதினாறுவயது ஆயிற்று. அவன் ஒருபெரிய வீரனாக விளங்கினான். தன் தந்தையும் சிற்றப்பனும் சிறையிலிருப்பதைக் கேட்டறிந்தான். உடனே புறப்பட்டு டெல்லிக்குப் போனான். பாதுஷாவைப் பார்த்தான். "குதிரை சவாரிக்கு வந்தேன்" என்றான். ஷா ஆலம் குதிரையைக்காட்ட, அதைத் தேசிங்கு பார்த்தான். கடிவாளத்தைப் பிடித்து முதுகில் ஒரு

தட்டு தட்டினுன். குதிரை முதுகை வளைந்து கொடுத்தது. தேசிங்கு அதன்மீது பாய்ந்து ஏறினுன். குதிரை ஓட்டம் எடுத்தது. தாவித்தாவிப் போயிற்று. அதைப் பார்த்திருந்தவர்கள் பயப்பட்டார்கள்.

சற்று நேரத்துக் கெல்லாம் தேசிங்கு குதிரையுடன் திரும்பி வந்தான். குதிரைக்குப் பெருமூச்சு வாங்கிற்று. வாயில் நுரை வழிந்தது. உடம்பெல்லாம் வேர்வை கண்டது, பாதுஷாவுக்கு உண்டான மகிழ்ச்சிக்குக் கணக்கில்லே.

பாதுஷா, தேசிங்கைப் பக்கத்தில் கூப்பிட்டான்; கைபிடித்துக் குலுக்கினுன். தோளில் தட்டிக் கொடுத்தான். "தேசிங்கு, நீதான் வீரன். இந்தக் குதிரை உனக்குத்தான் தகுந்தது. இதை நீ சொந்தமாக வைத்துக்கொள். இது முதல் உன்னிடம் கப்பம் வாங்கமாட்டேன்" என்ருன்.

தேசிங்கு பாதுஷாவை வணங்கினுன். தரணிசிங்கையும் சிறிய தந்தையையும் சிறைவிடுமாறு கேட்டான். அப்படியே அவர்களும் விடப்பட்டனர். அதுபோல மற்ற மன்னர்களேயும் விடச்செய்தான். ஊருக்குப் போக விடை கேட்டான். ஷா ஆலம் தேசிங்கைப் பார்த்து. "வீரனே, உன்னேவிட்டுப் பிரிய என் மனம் விரும்பவில்லே. ஆகையால், நீ வருஷத்துக்கு ஒரு முறை என்னிடம் வந்து போகவேண்டும்" என்று கூறினுன். தேசிங்கும் அப்படியே ஒப்புக் கொண்டான்.

பாதுஷாவின் சேனைத்தலைவன் தேசிங்கின் வீரத்துக்காக மிகவும் மெச்சினான். தன் மகளைத் தேசிங்குக்கு மணஞ்செய்து கொடுத்தான். மற்றும் பலபரிசில்கள் தேசிங்குக்குக் கிடைத்தன. அவன் தன் தந்தை முதலியவர்களுடன் திரும்பிச் சென்று சில நாட்களில் அரசனானான்.

பயிற்சி 15

விளக்கம் :—பத்து + இரண்டு = பன்னிரண்டு. குணம் + உடையது = குணமுடையது. குதிரை + ஐ = குதிரையை. உடம்பு + எல்லாம் = உடம்பெல்லாம். தேசிங்கு + ஐ = தேசிங்கை. சொந்தம் + ஆக = சொந்தமாக.

பிரித்து எழுது.

பயப்பட்டார்கள், கணக்கில்லை, என்னிடம், நாமும்.

கூட்டி எழுது.

தென் ஆற்காடு, அழகு உடையவன், அதை அடக்க, ஓட்டம் எடுத்தது.

எதிர்மொழி எழுது.

பெரியது, வேண்டும், மகிழ்ச்சி, போக, பிரிய.

கீழே பெரிய எழுத்திலுள்ள சொல்லுக்குப் பதில் சொல் எழுது.

1. தேசிங்கு அரசனாய் இருந்தான்.
2. ஷாஆலம் டெல்லிக்குப் பாதுஷா.
3. தேசிங்கு குதிரை மீது பாய்ந்து ஏறினான்.
4. குதிரை தாவித்தாவி ஓடிற்று.
5. தேசிங்கு சற்று நேரத்தில் திரும்பினான்.

கேள்விகள்.

1. செஞ்சி எங்கே இருக்கிறது ?
2. தேசிங்கு ஏன் டெல்லிக்குப் போனான் ?
3. குதிரையைப் பார்த்தவுடன் தேசிங்கு என்ன செய்தான் ?
4. பாதுஷா தேசிங்கின் கையை எப்போது குலுக்கினான் ?
5. இப்பாடத்திலிருந்து நான்கு பெயரும், நான்கு வினையும் எழுது.

12. துருவன்

மனைவி	நெஞ்சை	மந்திரம்
பொறுமை	அடைத்து	பனி
பொறாமை	கதறி	காற்று
ஏறக்குறைய	மார்போடு	எதிலும்
ஒற்றுமை	தழுவி	அசையாமல்
மடிமேல்	முத்தம்	மெச்சினர்
தூக்கினான்	அமர்வது	காட்சி
கடுமையாக	தவம்	நட்சத்திரம்
வருத்தம்	முடியும்	மண்டலம்
துக்கம்	முனிவர்	விளங்க

முன் காலத்தில் ஒரு அரசன் இருந்தான். அவன் பெயர் உத்தானபதன். அவனுக்கு இரண்டு மனைவிகள். பெரிய மனைவியின் பெயர் சுநீதி. சிறிய மனைவியின் பெயர் சுருசி. பெரியவள் மிகவும் நல்லவள். சிறியவள் கெட்டவள். மூத்தவள் பொறுமை உடையவள். இளையவள் பொறாமை உடையவள். இருவருக்கும் ஒவ்வொரு ஆண்குழந்தை உண்டு. மூத்தவளின் மகன் பெயர் துருவன். இளையவள் பிள்ளையின் பெயர் உத்தமன். துருவனும் உத்தமனும் ஏறக்குறைய ஒரே வயது பிள்ளைகள். ஆனாலும் துருவன் பெரியவன். இருவரும் ஒற்றுமையாக இருந்தார்கள்.

ஒரு நாள் அரசன் சுருசியோடு பேசிக்கொண்டிருந்தான். உத்தமன் தந்தையின் மடிமேல் உட்கார்ந்திருந்தான், அப்போது துருவனும் அங்கே

(துருவனுக்குத் திருமால் காட்சி தருதல்)

போனான். ஆசையுடன் தந்தையிடம் ஓடினான். தந்தை துருவனையும் மடிமேல் வைத்துக்கொள்ளத் தூக்கினான். உடனே சுருசிக்குக் கோபம் வந்தது. துருவனை இழுத்துத் தூரத்தில் தள்ளினாள். "புத்தி கெட்டவனே, அப்பாவின் மடிமேல் இருக்கும் பெருமை உனக்கு ஏது? இனி அந்த ஆசையை விடு" என்று கடுமையாகப் பேசினாள்.

துருவனுக்கு அதிக வருத்தம் உண்டாயிற்று. துக்கம் நெஞ்சை அடைத்தது. அப்படியே தன் தாயிடம் ஓடினான். தாயைப் பார்த்தவுடன் கதறி அழுதான். சுநீதி தன் மகனை எடுத்து மார்போடு தழுவிக் கொண்டாள். முத்தங் கொடுத்தாள். "ஏன் அழுகிறாய்?" என்றாள். துருவன் நடந்ததைச் சொன்னான்.

சுநீதிக்கும் அடக்க முடியாத துக்கம் வந்தது. ஆயினும் அதை வெளிக்குக் காட்டவில்லை. தன் மகனைப் பார்த்து, "துருவா, தந்தை மடிமேல் உட்காருவது பெருமை தான். அதைவிட கடவுளின் மடியில் அமர்வது மிகப் பெருமை" என்றாள். அப்போது துருவன் "அம்மா அது எப்படி முடியும்?" என்றான். "கடவுளை நோக்கித் தவம் செய்தால் முடியும்" என்றாள் தாய்.

துருவன் அப்போதே எழுந்தான். "நான் தவம் செய்யப்போகிறேன்" என்றான். தாய் தடுத்துப் பார்த்தாள். அவன் கேட்கவே யில்லை. காட்டு வழியைப் பார்த்து நடந்தான். வழியில் ஒரு முனிவர் அவனுக்கு மந்திரம் சொல்லித் தந்தார்.

துருவன் காட்டை அடைந்தான். மழை, பனி, வெய்யில், காற்று எதிலும் அசையாமல் இருந்தான். அவனுடைய தவத்தைக் கடவுள் மெச்சினர். உடனே வந்து காட்சி தந்தார். துருவனை நக்ஷத்திர மண்டலத்தில் விளங்க வைத்தார்.

பயிற்சி 16

விளக்கம் :—ஒற்றுமை + ஆக = ஒற்றுமையாக. சுருசி + ஓடு = சுருசியோடு. தந்தை + இடம் = தந்தையிடம். நெஞ்சு + ஐ = நெஞ்சை. நக்ஷத்திரம் + மண்டலம் = நக்ஷத்திரமண்டலம்.

பிரித்து எழுது.

உட்கார்ந்திருந்தான், ஆசையுடன், துருவனையும், உண்டாயிற்று.

கூட்டி எழுது.

உனக்கு ஏது, நெஞ்சை அடைத்தது, கதறி அழுதான், மடியில் அமர்வது.

எதிர்மொழி எழுது.

முன், நல்லவள், மேல், கடுமை, பெருமை, மழை.

கீழே பெரிய எழுத்தில் உள்ள சொல்லுக்குப் பதில் வேறு மொழி எழுது.

1. மூத்தவள் பொறுமை உடையவள்.
2. சிறியவள் பொறாமை உடையவள்.
3. அரசன் துருவனைத் தூக்கினன்.
4. தாயைப் பார்த்தவுடன் கதறியழுதான்.
5. துருவன் காட்டை அடைந்தான்.

கேள்விகள்.

1. உத்தான பாதனுக்கு எத்தனை மனைவிகள் ?
2. துருவன் எவளுடைய பிள்ளை ?
3. சுருசி எப்படிப்பட்டவள் ?
4. துருவனுக்கு ஏன் வருத்தம் உண்டாயிற்று ?
5. கடவுள், தூக்கினான், தந்த, தவம், மெச்சினார், மேன்மை பெயர்ச்சொல், வினைச்சொல் எழுது.



13. நீர்த்தோட்டி

ஜந்துக்களை	மூச்சு	சாய்ந்து
முழுதும்	அகப்படாது	மிதந்து
செதில்கள்	உறிஞ்சும்	நெய்ப்பசை
மூடிமூடி	பிரித்து	குளிக்கிறார்கள்
செவுள்	திறந்து	துவைக்கிறார்கள்

பிள்ளைகளே நீங்கள் தண்ணீரில் வாழும் ஜந்துக்களைப் பார்த்திருக்கிறீர்களா ? நீரில் மீன், தவளை, நண்டு, பாம்பு முதலியவை உண்டு. இது மீனின்

படந்தான். மீனில் பலவகை உண்டு. இந்த மீன் வாழைக்காய்போல் நீண்டு உருண்டு இருக்கிறது அல்லவா? இதன் உடல் முழுதும் செதில்கள் உண்டு.

மீனின் கழுத்தண்டை ஏதோ மூடி மூடித் திறக்கிறது அல்லவா? அதுதான் செவுள். அது என் மூடி மூடித் திறக்கிறது தெரியுமா? அது மூச்சுவிடுகிறது. மூச்சு விடுவதென்றால் என்ன? காற்றை உட்கொண்டு வெளிவிடுவது. அதுபோல எல்லா உயிரும் மூச்சுவிடுவதுண்டு. மீன், தண்ணீருக்குள் இருப்பதால் அதற்குத் தனியே காற்று அகப்படாது.

மீன் தண்ணீரை உறிஞ்சும்; அதில் உள்ள காற்றைப் பிரித்துக் கொள்ளும்; தண்ணீரை மாத்திரம் செவுளின் வழியாக வெளியே விடும். அதனால்தான் செவுள் திறந்து திறந்து மூடுகிறது. மீனின் வால் புறத்தில் விசிறிபோல் இருக்கிறதே, அதுதான் சிறகு. கழுத்துப் பக்கத்திலும் இரண்டு சிறகுகள் உண்டு. இந்த மூன்று சிறகும் இல்லாவிட்டால் மீன் வலப்புறம், இடப்புறம் திரும்ப முடியாது.

முதுகிலும் வயிற்றிலும் சிறகுகள் உண்டு. அவை இல்லாவிட்டால் மீன் பக்கத்தில் சாய்ந்து, மிதந்து விடும். மீனின் உடலில் ஒரு வகையான நெய்ப்பசை உண்டு. ஆகையினால்தான் மீனின் உடலில் தண்ணீர் ஒட்டுவதில்லை.

மீன், தண்ணீரில் இருப்பதால் நமக்கு மிகவும் நன்மை உண்டு. தண்ணீரில் மனிதர்கள் குளிக்கி

ருர்கள் ; உடைகளைத் துவைக்கிருர்கள். இப்படியெல்லாம் செய்வதால் நீரில் அழுக்கு சேரும் அல்லவா. அந்த அழுக்கை மீன் தின்றுவிடுகிறது. அதனுல் தான் நீர் சுத்தமடைகிறது. நீரைச் சுத்தம் செய்வதால் மீனை நீர்த்தோட்டி என்று சொல்லலாம் அல்லவா ?

பயிற்சி 17

விளக்கம் :—தண்ணீர் + இல் = தண்ணீரில். கழுத்து + அண்டை = கழுத்தண்டை. இருப்பது + ஆல் = இருப்பதால். வலம் + புறம் = வலப்புறம். ஒட்டுவது + இல்லே = ஒட்டுவதில்லே. சுத்தம் + அடைகிறது = சுத்தமடைகிறது.

பிரித்து எழுது.

தண்ணீர், விடுவதென்ருல், இடப்புறம், இப்படியெல்லாம்.

கூட்டி எழுது.

முதலியவை உண்டு, உருண்டு இருக்கிறது, அதில் உள்ள,

எதிர்மொழி எழுது.

மூடி, உள், கொள்ளும், வலம், நன்மை.

கீழே பெரிய எழுத்திலுள்ள சொல்லுக்குப் பதில் வேறுசொல் அமைக்க.

1. தனியே காற்று அகப்படாது.
2. வலப்புறம் இடப்புறம் திரும்பமுடியாது.
3. மீனினுல் நமக்கு மிகவும் நன்மை.
4. அழுக்கை மீன் தின்று விடுகிறது.
5. மீனில் பலவகை உண்டு.

கேள்விகள்.

1. மீன் எங்கே வசிக்கும் ?
2. மீனின் செவுள் எதற்கு உதவுகிறது ?
3. வால் சிறகினுல் மீனுக்கு என்ன நன்மை ?

4. மீனின் உடலில் தண்ணீர் ஏன் ஒட்டுவதில்லை?

5. எதனால், மீனுக்கு நீர்த்தோட்டி என்னும் பெயர் பொருந்தும்?

---

14. திறமையுள்ள நாய்

திறமை	காப்பாற்றினர்	பின்னும்
திருவண்ணாமலை	சவாரி	மடக்கி
நகரம்	இருட்காலம்	பறிகொடுத்து
சுற்றிலும்	கூட்டி	கவனிக்க
மலை நாடு	நடுவழி	பற்றி
கிராமம்	திருடர்கள்	செலுத்தினர்
கணக்கப் பிள்ளை	திட்டென்று	குடிசைகளை
சுறு சுறுப்பு	குதித்தது	போலீசார்
நுட்பமான	மறுத்தது	

திருவண்ணுமலை என்பது சிறந்த நகரம். அந்த நகரத்தைச் சுற்றிலும் மலைகள் உண்டு. மலை நாட்டில் காடுகளும் இருக்கும் அல்லவா! அப்படிப்பட்ட இடத்தில் ஊசாம்பாடி என்று ஒரு ஊர் உண்டு. அது மிகவும் சிறிய கிராமம். அவ்வூர் திருவண்ணுமலைக்கு ஆறு மைல் தூரத்தில் இருக்கிறது.

முன் காலத்தில் ஊசாம்பாடியில் ஒருவர் வசித்திருந்தார். அவர் பெயர் ஐயாசாமி. அவர் கிராமக் கணக்கப்பிள்ளை வேலையில் இருந்தார். ஐயாசாமி சுறுசுறுப்பு உடையவர். எந்த வேலையையும் ஒழுங்காகச் செய்வார். எதிலும் கெட்டிக்காரர். நுட்பமான அறிவாளி. எல்லாருக்கும் உபகாரி.

ஐயாசாமி, ஒரு நாயை வளர்த்தார். அதை அவர் தமது குழந்தைபோல் காப்பாற்றினுர். அதுவும் அவரிடம் அதிக அன்பாய் இருந்தது. அவர் எங்கே போனுலும் நாய் பின்னுலே போகும். ஐயாசாமி சவாரிக் குதிரை வைத்திருந்தார். சில சமயம் நாயைக் குதிரைமேல் ஏற்றிச் செல்வதும் உண்டு. ஒருநாள் ஐயாசாமி அவசரமாகத் திருவண்ணுமலைக்குப் போகப் புறப்பட்டார். அப்போது இரவு நேரம். இருட்காலமாகவும் இருந்தது. நிலவு ஒளியும் இல்லை. அவர் கையில் ஒரு ஆயிரம் ரூபாய் கொண்டுபோனுர். வழக்கம்போல் நாயையும் கூட்டிச் சென்ருர்.

குதிரை, வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. நடுவழியில் சில திருடர்கள் பதுங்கியிருந்தார்கள்.

அதை நாய் மோப்பத்தால் அறிந்துகொண்டது. குதிரையின்மேல் இருந்த நாய் திட்டென்று கீழே குதித்தது. குதிரையை வழிமறுத்தது. பலமாகக் குரைத்தது. ஆனல், அதன் குறிப்பை ஐயாசாமி அறிந்துகொள்ளவில்லை. பின்னும் குதிரையை வேகமாக நடத்தினர்.

சிறிது தூரம் சென்றதும் ஐயாசாமியைத் திருடர்கள் மடக்கிக்கொண்டார்கள்; பணத்தையும் உடைகளையும் பிடுங்கிக்கொண்டார்கள். எல்லாவற்றையும் பறித்துக் கொண்டு விரைந்து போனர்கள். நாய் அங்கேயே நின்றுவிட்டது. ஐயாசாமி அதைக் கவனிக்கவில்லை.

அவர் திருவண்ணுமலை சென்று அடுத்த நாள் திரும்பினர். திருடுபோன இடத்தில் நாய் படுத்திருந்தது. எஜமானனைக் கண்ட நாய் எழுந்து எதிரில் போய் நின்றது. உடனே அவர் கீழே குதித்தார். நாய் வேறு ஒரு வழியைப் பற்றிச் செல்லக் குறிப்பிட்டது. அவர் உடனே குதிரையை அவ்வழியாகச் செலுத்தினர். சுமார் இரண்டு மைல் தூரம் காட்டுக்குள் சென்ருர். அங்கே சில குடிசைகளைக் கண்டார். நாய் குடிசைகளைச் சுற்றிச் சுற்றிக் குரைத்தது. அதை அறிந்தார் ஐயாசாமி. அடுத்த நாள் போலீசாரைக் கூட்டிச் சென்ருர். திருடர்களைப் பற்றிப் பொருளைக் கண்டுபிடித்தார். ஒன்றுவிடாமல் வாங்கிக் கொண்டு வந்துவிட்டார்.

பயிற்சி 18

விளக்கம்:—திரு + அண்ணுமலை = திருவண்ணுமலை. அ + ஊர் = அவ்வூர். ஒழுங்கு + ஆக = ஒழுங்காக. அவர் + இடம் = அவரிடம். அன்பு + ஆய் = அன்பாய். வைத்து + இருந்தார் = வைத்திருந்தார்.

பிரித்து எழுது.

காடுகளும், இருட்காலம், பதுங்கியிருந்தார்கள், அங்கிருந்த.

கூட்டி எழுது.

மலைகள் உண்டு, தூரத்தில் இருக்கிறது, போன இடத்தில்.

எதிர்மொழி எழுது.

பின்ணுலே, இருள், போய்.

கீழே பெரிய எழுத்திலுள்ள சொல்லை மாற்றிப் பதில்சொல் அமைக்க.

1. அது மிகவும் சிறிய கிராமம்.
2. ஐயாசாமி ஊசாம்பாடியில் வசித்திருந்தார்.
3. நாயைக் குழந்தைப்போல் காப்பாற்றினுர்.
4. நாயையும் கூட்டிச் சென்ருர்.
5. எல்லாவற்றையும் பறிகொடுத்தார்.

கேள்விகள்.

1. ஊசாம்பாடி எங்கே இருக்கிறது?
2. ஐயாசாமியின் வேலை என்ன?
3. திருடரை ஐயாசாமி எப்படி அறிந்தார்?

யோசனை.

நாய் திருடர் இருக்கும் இடத்தை எப்படி அறிந்திருக்கும்?

இலக்கணம்

நாய் என்னும் சொல் ஒன்றைக் குறிக்கிறது; அது ஒருமைச் சொல். நாய்கள் என்னும் சொல் பலவற்றைக் குறிக்கிறது; அது பன்மைச் சொல். இப் பாடத்திலிருந்து சில ஒருமைச் சொல், பன்மைச் சொல் எடுத்து எழுது.



15. நல்ல கள்ளன்

தேகதிடம்	நினைத்தான்	குற்றம்
சமர்த்தன்	விலங்கிட்டு	கொள்ளை
ஜயித்தான்	பொங்கியது	பிழை
போரும்	கொடியவனே	உதவ
படையும்	தண்டனை	வயிற்றுக்கு
அஞ்சாத	விதிக்க	பட்டினி
மாளிகை	வேந்தே	எளியவர்க்கு
ஏழைகளை	உரையாடல்	பெரும்பொருள்
பங்கிட்டு	மொழியாட	பேராசை

முன் ஒரு காலத்தில் சிகந்தர் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் தேகதிடம் உள்ளவன். சண்டை செய்வதில் சமர்த்தன். ஆகையால், பல நாடுகளை ஜயித்தான். ஆயினும் ஒரு நாளும் சும்மா இருக்க

மாட்டான், எப்போதும் போரும் படையுமாகவே இருப்பான்.

அவனுடைய நாட்டில் ஒரு திருடன் இருந்தான்; அவனும் பெரிய வீரன்; அஞ்சாத நெஞ்சம் உடையவன்; பெரிய பெரிய மாளிகையிலும் திருடுவான்; ஆனால், ஏழைகளை வருத்தமாட்டான். திருடிவந்த பொருளைப் பல ஏழைகட்கும் பங்கிட்டு விடுவான்.

அந்தத் திருடனைப் பிடிக்க அரசன் நினைத்தான். பல நாட்கள் வரையில் அவன் அகப்படவேயில்லை. அரசன், ஒரு பெரிய சேனையை அனுப்பினான். அவர்கள் அக்கள்வனைப் பற்றினார்கள். விலங்கிட்டு, அழைத்து வந்து, அரசனுக்கு எதிரில் நிறுத்தினார்கள். அவனைப் பார்த்தவுடன் மன்னனுக்குக் கோபம் பொங்கியது. "கொடியவனே, உனக்குக் கொலைத்தண்டனை விதிக்கப்போகிறேன்" என்றான். அப்போது திருடன் அரசனைப்பார்த்து, "வேந்தே, வீண் கோபம் வேண்டாம். நாம் இருவரும் சிறிது நேரம் உரையாடல் வேண்டும். அதன் பின் உங்கள் எண்ணப்படி தண்டித்து விடுங்கள்" என்றான்.

அதைக்கேட்ட அரசன், "அப்படியே செய். நீ என்ன பேச விரும்புகிறாய்" என்றான். இருவரும் மொழியாடத் தொடங்கினார்கள்.

திரு:—என்மீது ஏதாவது குற்றம் உண்டா?

அர:—ஏன் இல்லை. நீ கொள்ளையடிப்பது குற்றமில்லையா?

திரு :—அப்படியானால் தாங்களுந்தான் கொள்ளை யடிக்கிறீர்கள். அதுவும் பிழைதானே?

அர :—நான் நாட்டின் நன்மைக்காக அப்படிச் செய்கிறேன்.

திரு :—நானும் ஏழைகளுக்கு உதவவே திருடுகி றேன்

அர :—நீ பணக்காரர் மனதை வருத்துகிறாய் அல்லவா?

திரு :—தாங்களுந்தான் மன்னர்களின் மனதை வருத்துகிறீர்கள்.

அர :—அப்படியானால் நானும் உன்னைப்போல் குற்றவாளியா?

திரு :—நான் அப்படிச் சொல்லவில்லை. நான் வயிற்றுக்கு இல்லாமல் திருடுகிறேன். திருடியதைப் பட்டினி கிடக்கும் எளியவர்களுக்குப் பங்கிட்டுத்தருகி றேன். நீங்கள் பெரும் பொருள் வைத்திருக்கிறீர்கள். ஆனால், போதும் என்று இருப்பதில்லை. பேராசை யால் பின்னும் கொள்ளையிடுகிறீர்கள். ஆகையால், என்னைவிடத் தாங்கள் பெரிய குற்றவாளி என்பது என் எண்ணம். (என அஞ்சாமல் பேசினான்.)

அதைக் கேட்ட அரசனுக்குப் புத்தி வந்தது. அது முதல் அவன், எந்த நாட்டையும் கொள்ளை அடிப்பதில்லை. ஏழைகளையும் காப்பாற்றி வந்தான். திருடன், பலருக்கு நன்மை செய்தான். தானும்

வருத்தமின்றி வாழ்ந்தான். அவன் நல்ல கள்ளன் அல்லவா!

பயிற்சி 19.

விளக்கம்:—தேகம் + திடம் = தேகதிடம். போர் + உம் = போரும். சேனை + ஐ = சேனையை. விலங்கு + இட்டு = விலங்கிட்டு. உரை + ஆடல் = உரையாடல்.

பிரித்து எழுது.

மாளிகையிலும். அகப்படவேயில்லை. மொழியாட, தாங்களுந் தான்.

கூட்டி எழுது.

ஒருவன் இருந்தான், நெஞ்சம் உடையவன். அரசன் எதிரில்.

எதிர்மொழி எழுது.

ஜயித்தான், நன்மைக்காக, குற்றவாளி, ஏழை.

பெரிய எழுத்துக்களில் உள்ள சொல்லை மாற்றி பதில் மொழி எழுது.

1. சிகந்தர் தேக திடம் உள்ளவன்.
2. எப்போதும் படையும் போருமாகவே இருப்பான்.
3. அரசன் சேனையை அனுப்பினான்.
4. கள்ளனை அரசனுக்கு எதிரில் நிறுத்தினார்கள்.
5. அன்று முதல் அரசனுக்குப் புத்தி வந்தது.

விலங்கு இருபொருள் எழுது.

கேள்விகள்.

1. சிகந்தர் என்பவன் யார்?
2. திருடனைப் பிடிக்க சிகந்தர் என்ன செய்தான்?
3. திருடன் ஏழைகளுக்கு எப்படி உதவினான்?

யோசனை.

திருடன் செய்த யுக்தி என்ன?



16. கழுதை

எஜமானன்	வைக்கோல்	கடிப்போம்
உழைக்கிறேன்	தவிடு	உதைப்போம்
மூட்டை	பிண்ணுக்கு	வழக்கம்
சுமப்பது	புசிப்பேன்	சாணி
வெளுத்த	பொருக்கி	பிடரி
தாங்கி	நிறைய	குட்டை
கழிகிறது	சீமை	மெலிந்திருக்கும்
அக்கரையாக	குறவர்	சாம்பல்

சிறுவர்களே, என்னைப் பார்த்தீர்களா! நான் ஒரு மிருகம். என் பெயர் கழுதை. என்னுடன் வருகிற மனிதன் என் எஜமானன். அவன் ஒரு வண்ணான்.

அவனுக்குத்தான் நான் உழைக்கிறேன். என் வேலை என்ன தெரியுமா? மூட்டை சுமப்பதுதான். என்ன மூட்டை என்கிறீர்களோ? துணி மூட்டை. என் முதுகில் இருப்பது அதுதான்.

மூட்டை சுமந்து, சுமந்து என் முதுகும் வளைந்து விட்டது. ஆற்றுக்குப் போகும்போது அழுக்குத் துணிமூட்டை சுமக்கவேண்டும். திரும்பி வரும்போது வெளுத்த துணிகளைத் தாங்கிவரவேண்டும். மூட்டை சுமந்தே என் காலம் கழிகிறது. என்னை என் எஜமானன் அக்கரையாகக் காப்பாற்றுவதில்லை. ஆனாலும் நான் பொறுமையாக உழைக்கிறேன்.

நான் புல், வைக்கோல், தவிடு, பிண்ணாக்கு முதலியவைகளைப் புசிப்பேன். எப்பொழுதும் நான் சுத்தமான நீரையே குடிப்பேன். தெருவில் கிடக்கும் காகிதங்களையும் பொருக்கித் தின்பேன். எஜமானன் வீட்டில் எனக்கு வயிறு நிறைய உணவு கிடைக்காது. என் எஜமானன் என் முன்கால் இரண்டையும் சேர்த்துக் கட்டி வெளியில் விடுவான். அப்போது வயிறு நிறைய மேய்ந்து வருவேன்.

சீமையில் உள்ளவர்கள் என் இனத்தாரை அன்பாய்க் காப்பாற்றுகிறார்கள். சவாரிக்காகவும் எங்களை அவர்கள் வைத்துக்கொள்கிறார்கள். இந்த நாட்டில் எங்களைக் குறவர்களும் வளர்க்கிறார்கள். இந்நாட்டார் யாரும் எங்களை மூட்டை சுமக்கவே செய்கிறார்கள்.

எங்களைப் பார்க்கும்போது உங்களுக்குப் பிடிக்காது. நாங்கள் கத்தினாலும் அப்படித்தான். எங்க

ளிடத்தில் கெட்ட குணமும் உண்டு. நீங்கள் யாரும் எங்கள் அருகில் வரமுடியாது. முன்பக்கம் வந்தால் கடிப்போம். பின்புறம் வந்தால் உதைப்போம். பின்கால் இரண்டையும் தூக்கி உதைக்கும் வழக்கம் எங்களுக்குண்டு.

எங்கள் சாணியும் பாலும் மருந்துக்கு உதவும். நாங்களும் சற்று ஏறக்குறைய குதிரையைப்போலவே இருப்போம். எங்களுக்கும் பின்கழுத்தில் பிடரி மயிர் உண்டு. ஆனால், எங்களுடைய கால் குட்டையாயும் சிறுத்தும் இருக்கும். வால் மெலிந்திருக்கும்.

எங்கள் இனத்தார் சாம்பல் நிறமானவர்கள். சிலர் கறுப்பாயும் இருப்பதுண்டு. எங்கள் குட்டிகள் பார்வைக்கு அழகாய் இருக்கும். "காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு" அல்லவா! அதுபோல எங்கள் குட்டிகளிடத்தில் நாங்கள் மிக அன்பாய் இருப்போம்.

பயிற்சி 20.

விளக்கம் :—முதுகு + இல் = முதுகில். சீமை + இல் = சீமையில். குட்டை + ஆயும் = குட்டையாயும். இருப்பது + உண்டு = இருப்பதுண்டு.

பெரிய எழுத்துள்ள மொழிகளை நீக்கி, பதில்மொழி அமைக்க.

1. ஆற்றுக்குப் போகும் போது.
2. துணிகளைத் தாங்கி வர வேண்டும்.
3. வயிற்றுக்கு நிறைந்த உணவு.
4. எங்களிடம் ஒரு கெட்ட குணம் உண்டு.
5. கால் குட்டையாயும் சிறுத்தும் இருக்கும்.

கத்தி, குட்டை இரண்டு அர்த்தம் எழுது.

கேள்விகள்

(1) கழுதை எப்படி யெப்படி உதவுகிறது?

(2) கழுதையிடம் உள்ள கெட்ட குணம் யாது?

(3) இப்பாடத்தில் வந்த பழமொழி எது?

இப் பாடத்திலிருந்து ஒருமைச் சொல் நான்கும் பன்மைச் சொல் நான்கும் எழுது.

---

17. குரு பக்தி

வரலாறு	கௌரவர்	காணிக்கை
குரு	தட்டாமல்	பாஞ்சாலம்
பக்தி	ஆணை	பங்கம்
வில்	இயற்ற	அமர்
வித்தை	இறைவன்	தேர்க்கால்
சதுரர்	இராமல்	தொடுத்தான்
குமாரர்	இணை	விசித்து
ஆசிரியர்	அஸ்திரம்	பூரித்தார்
தனுர்	கரம்	பதம் (பாதம்)

பாண்டவர்கள் வரலாறு உங்களுக்குத் தெரியும் அல்லவா! அவர்களுக்குக் குரு ஒருவர் இருந்தார். அவர் வில் வித்தையில் சதுரர். இராஜ குமாரர்களுக்கு வில் வித்தை கற்றுக் கொடுப்பதிலும் அவருக்குத் திறமை யுண்டு. அவர் பெயர் துரோணர். குருவுக்கு ஆசாரியர் என்ற பெயரும் உண்டு; ஆதலால், துரோண குருவை துரோணாசாரியர் என்று கூறுவது வழக்கம்.

துரோணரிடம் வில் வித்தை கற்கப் பல மன்னர் மக்கள் வருவதுண்டு. அக் குரு அஸ்தினபுரத்தில் குடியாயிருந்தார். பாண்டுவின் மக்களாகிய பாண்டவர்க்கும் திருதராஷ்டிரன் மைந்தர்களாகிய கௌரவர்களுக்கும் தனுர் வித்தை கற்பிக்கவே அவர் அங்குத் தங்கினர். கௌரவர், பாண்டவர் ஆகிய அவ்வரச குமாரர்களுள் அருச்சுனன் மிகவும் கெட்டிக்காரன். அருச்சுனன் மீது துரோணருக்கு அதிக ஆசை. ஏன் தெரியுமா? அவன் சுறுசுறுப்பாகவும் புத்திசாலித்தனமாகவும் அக்கரையாகவும் வித்தையைக் கற்பான். உபாத்தியாயர் பாடம் சொல்லும்போது அதே கவனமாகக் கேட்டுக்கொள்வான். ஆசிரியரிடம் கேட்டதை உடனே செய்து பார்ப்பான். மறக்கும் குணம் அவனிடம் எட்டியும் பார்ப்பதில்லை. முதல் நாள் கற்றதை மறுநாள் குருவுக்குச் செய்து காட்டிவிடுவான்.

அருச்சுனனிடம் மற்றொரு நல்ல குணமும் இருந்தது. அது என்ன என்கிறீர்களோ! அதுதான் மாணவர்களுக்குக் கட்டாயமாக இருக்க வேண்டிய குணம். அவன் குருவின் சொல்லைச் சிறிதும் தட்டாமல் தவறாமல் செய்வான். ஆசிரியர் ஆணை இல்லாமல் எங்கும் போகமாட்டான்; எதையும் இயற்றமாட்டான். எப்போதும் குருவுடனே இருப்பான். ஆசிரியருக்கு ஆக வேண்டிய அனைத்துத் தொழிலையும் அவன் தானாகவே விரைந்து விருப்பத்தோடு செய்வான். குருவை அவன் தெய்வமாகவே நினைத்திருந்தான். "எழுத்தறிவித்தவன் இறைவன்" என்பதே அவனுடைய எண்

ணம். இப்படிப்பட்ட மாணவன்மீது ஆசிரியருக்கு அன்பு இராமற் போகுமா !

துரோணர், அருச்சுனனைத் தன் கண்களைப் போலவே நினைத்தார். அருமையான வித்தைகளைச் சமயம் கிடைத்தபோது அவனுக்குக் கற்பித்தார். ஆகையால், அருச்சுனன் அஸ்திர வித்தையில் இணை யற்றவனுய் விட்டான். அருச்சுனன் ஒருநாள் தன் குருவைக் கிட்டினுன். பாதத்தில் பணிந்தான். கரம் கூப்பி நின்ருன். "சுவாமி, தாங்கள் எனக்கு இவ்வளவு காலமாக கல்வி கற்பித்தீர்கள் ; அதற்கு ஈடாக யான், தாங்கள் விரும்புவதைக் குரு காணிக்கை யாகச் செலுத்த நினைக்கிறேன்" என்ருன்.

துரோணருக்கு மகிழ்ச்சி பெருகிற்று. "அருச்சுன, ஆம் ; நான் உன்னிடம் பெறக் கருதி யிருப்பது ஒன்று உண்டு. என் கருத்தை முடிக்கும் வீரன் நீயே, பாஞ்சால நாட்டு அரசனுக உள்ள துருபதன் என்னிடம் மொழி தவறினுன். அவனுடைய சபையில் என்னைப் பங்கப்படுத்தினுன். நீ சென்று அவனேடு அமர் புரிந்து, அவனைப் பற்றித் தேர்க் காலில் கட்டிவந்து என் எதிரில் நிறுத்து" எனக் கட்டளை யிட்டார். விஜயன் வில்லும் கையுமாகப் பாஞ்சாலனிடம் சென்ருன். அவனேடு போர் தொடுத்தான். அவனைப் பற்றித் தேர்க் காலில் விசித்துக் கொணர்ந்து துரோணரின் எதிரில் நிறுத்தினுன்.

துரோணர் மனம் பூரித்தார். "துருபதா, நீ என்னிடம் மொழி தவறியதற்கு இது போதும். உன்னை

மன்னித்தேன் போ" என்றார். அவன் சென்றவுடன் அருச்சுனன் ஆசிரியருடைய பாதத்தைப் பணிந்தான். அவனைப் பார்த்து, பார்த்தா, நீ எப்பொழுதும் தோல்வியடையமாட்டாய்; வெற்றியுடன் வாழ்வாய் என்று வரம் வழங்கினார் குரு. அவனும் அப்படியே வாழ்ந்தான்.

குரு பக்தி யுடையவன் குறைவடைய மாட்டான்.

பயிற்சி 21.

விளக்கம் :—துரோணர் + ஆசாரியர் = துரோணாசாரியர். வருவது + உண்டு = வருவதுண்டு. ஆசிரியர் + இடம் = ஆசிரியரிடம். பார்ப்பது + இல்லை = பார்ப்பதில்லை. இணை + அற்ற = இணையற்ற.

அமர் இரு பொருள் எழுது.

பெரிய எழுத்தில் உள்ள மொழிகளை நீக்கிப் பதில்மொழி அமைக்க.

1. அவர்களுக்கு குரு ஒருவர் இருந்தார்.
2. வில் வித்தை கற்க மன்னர் மக்கள் வருவதுண்டு.
3. அரச குமாரர்கள் பலர் கற்றார்கள்.
4. கற்றதை மறுநாள் செய்து காட்டுவான்.
5. ஆசிரியர் ஆணையின்றி எங்கும் ஏகமாட்டான்.

கேள்விகள்.

(1). துரோணர் எதில் கெட்டிக்காரர்?

(2) கௌரவர் என்பவர்கள் யார்?

(3) அருச்சுனன்மீது குருவுக்கு எதனால் ஆசை ஏற்பட்டது?

(4) அருச்சுனன் செலுத்திய குரு காணிக்கை யாது?

(5) இப் பாடத்திலிருந்து பெயர்ச்சொல், வினைச்சொல், ஒருமைச்சொல், பன்மைச்சொல் மும்மூன்று எழுது.



18. பரதன்

தம்பிமார்	சொரிந்தான்	சிம்மாசனம்
மரியாதை	பத்திரமாக	முடி
கேள்விப்பட்டான்	ஆட்சி	சூட்டுகிறேன்
பட்டத்தை	பாதத்தில்	ராஜ்யம்
கங்கையாறு	மிதியடி	காரியங்களை
கண்ணீர்	தாருங்கள்	உருகியது

முன் வகுப்பில் இராமனைப் பற்றி ஒரு கதை படித்தோம் அல்லவா. அவனுக்கு மூன்று தம்பிமார் உண்டு. அவர்கள் பெயர் பரதன், இலக்குமணன், சத்துருக்கன் என்பன.

இராமன் தம்பிமார்களிடம் அன்பாய் இருந்தான். அவர்களும் அவனிடம் மரியாதையாய் நடந்தார்கள்.

இராமன் தந்தை சொற்படி காட்டில் வசிக்கப் போனுன். அப்போது பரதன் பாட்டன் வீடு சென்றிருந்தான். திரும்பிவந்து அதைக் கேள்விப்பட்டான். அதனுல், மிகுந்த வருத்தம் அடைந்தான். அவனுக்கு வர இருக்கும் பட்டத்தையும் விரும்பவில்லே. தன் அண்ணனேத் தேடிக்கொண்டுபோகப் புறப்பட்டான்.

போன பரதன் கங்கையாற்றின் தென்கரையில் இராமனேக் கண்டான். திரும்பிவருமாறு வேண்டினுன்; கால்களில் விழுந்தான்; கண்ணீர் சொரிந்தான். "அண்ணு, நீங்கள் திரும்பிவராவிட்டால் நான் நாட்டுக்குப் போகமாட்டேன். உம்முடன் காட்டுக்குத் தான் வருவேன்" என்ருன்.

இராமன் அவனேப்பார்த்து "தம்பி, தந்தை சொல்லிய மொழி தவறமாட்டேன். பதினன்கு வருஷத்தையும் பதினன்கு நாட்களாக நினேத்திரு. நாட்டைப் பத்திரமாக ஆட்சி செய். வருந்தாமல் திரும்பிப்போ. பெரியவனுகிய என் சொல்லேக் கேள்" என்ருன்.

என்ன செய்வான் பரதன்! இன்னும் அதிகமாக அழுதான். "அண்ணு, தங்கள் பாதத்தில் உள்ள மிதிபடிவைத் தாருங்கள். அவற்றைச் சிம்மாசனத்தில் வைக்கிறேன். அவைகளுக்கு முடிசூட்டுகிறேன். நான் வேலேக்காரனேப் போல் ராஜ்ய காரியங்களேச் செய்கிறேன்" என்ருன்.

அதைக் கேட்ட இராமனுக்கு மனம் உருகியது. அப்படியே கொடுத்தான். பரதன் இராமனுடைய

மிதியடிகளைத் தலைமீது சுமந்து சென்றான். அண்ணனைக் காணும் வரையில் அவைகளையே அண்ணனாக மதித்திருந்தான். பரதனுடைய அன்பைப் பார்த்தீர்களா! நாமும் நம் உடன்பிறந்தவர்களிடம் அன்பாய் இருக்கவேண்டும்.

பயிற்சி 22.

விளக்கம்:—பத்து + நான்கு = பதினான்கு. சென்று + இருந்தான் = சென்றிருந்தான். தெற்கு + கரை = தென்கரை. கண் + நீர் = கண்ணீர். நினைத்து + இரு = நினைத்திரு. இராஜ்யம் + காரியம் = இராஜ்யகாரியம்.

முடி இரண்டு அர்த்தம் எழுது.

பெரிய எழுத்துள்ள மொழிகளை நீக்கி, பதில்மொழி அமைக்க.

1. இராமன் அன்பாய் இருந்தான்.
2. மிகுந்த வருத்தம் அடைந்தான்.
3. கங்கை நதியின் தென்கரை.
4. அவன் தம்பியைத் தேற்றினான்.

கேள்விகள்

1. இராமனைப்பற்றி முன்னே படித்த கதை எது?
2. இராமன் காடு போகும்போது பரதன் எங்கே சென்றிருந்தான்?
3. பரதன் இராமனை எங்கே சந்தித்தான்?
4. இராமன் பரதனுக்கு என்ன தைரியம் சொன்னான்?
5. இப்பாடத்திலிருந்து பெயர் ஐந்தும் வினை ஐந்தும் எடுத்து எழுதிக் காட்டு.

19. ஈ தரும் இனிமை

நன்மை	விளக்கமாக	கொள்ளைகொண்டு
பரவுகின்றன	மெழுக்கினுல்	விடுகதை
உச்சியில்	உண்பதற்காக	பொருத்தம்

தாதா :— மாணிக்கம், நீ ஈயைப் பார்த்திருக்கிருயா ?

மாணிக்கம் :— நான் எவ்வளவோ ஈயைப் பார்த்திருக்கிறேனே !

தாதா :— எங்கே பார்த்திருக்கிருய் ?

மா :— நம் வீட்டிலேயே பார்த்திருக்கிறேன் !

தாதா :— ஈயினுல் மனிதர்களுக்கு நன்மையா ? தீமையா ?

மா :— ஈயினுல் மனிதர்களுக்குத் தீமைதான். அதனுல், எவ்வளவோ நோய்கள் பரவுகின்றனவாம்.

தாதா :— யார் சொன்னுர்கள் ?

மா :— என் உபாத்தியாயர் சொன்னுர்.

தாதா :—அப்படியா! ஆனுலும் ஈயினுல் நன்மையும் இருக்கிறதே ! அதைச் சொல்லவில்லையா ?

மா :— இல்லை ; தாதா, ஈயினுல் நமக்கு நன்மை கூட இருக்கிறதா ?

தாதா :— இல்லாமல் என்ன ! ஆனுல், நன்மை செய்யும் ஈ வேறு இனத்தைச் சேர்ந்தது.

மா :— அதை எனக்குக் காட்டக்கூடாதா தாதா !

தாதா :— அப்படியானால் வா ; காட்டுகிறேன்.

மா :— எங்கே போகவேண்டும் ?

தாதா :— ஊருக்கு வெளியே உள்ள மாந்தோப்புக்குப் போகலாம்.

மா :— இதோ வருகிறேன்.

[என்று புறப்பட்டான். தாதா அவனை அழைத்துக்கொண்டு போனார். மாந்தோப்பில் ஒரு பெரிய மரத்தில் இருந்த தேன் கூட்டைக் காட்டினார்.]

தாதா :— அதோ பார். மரத்தின் உச்சியில் இருப்பது என்ன ?

மா :— அது என்ன தாதா ? ஏதோ தொங்குகிறதே.

தாதா :— ஆம் ; அதுதான் தேன்கூடு. எவ்வளவு அழகாய் இருக்கிறது பார்த்தாயா !

மா :— தாதா, இதைக் கட்டினவர் யார் ?

தாதா :— அதுதான் புதுமை. ஈக்கள் கூடி இந்தக் கூட்டைக் கட்டின.

மா :— அதற்கு உள்ளே என்ன இருக்கும் ?

தாதா :— அதற்குள் இருப்பதுதான் தேன்.

மா :— தாதா, ஈ இந்தக் கூட்டைக் கட்டுவதைப் பற்றிக் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள்.

தாதா :— ஈக்களில் தேன் ஈ என்று ஒரு வகை உண்டு. அது எப்போதும் பறந்து திரியும். அரும்புகள் மலர்ந்தவுடன் அதிலுள்ள தேனை எடுக்கும். எடுத்த தேனில் கொஞ்சம் சாப்பிடும். கொஞ்சம் தேனைக் கூட்டில் சேர்த்து வைக்கும்.

மா :— தேனீ கூட்டை எதனுல் செய்யும்?

தாதா :— மெழுக்கினுல் கட்டும். அந்த மெழுக்கு தேனீயின் வயிற்றில் உண்டாகிறது.

மா :— இவ்வளவு பெரிய கூட்டை ஒரே ஈ கட்டி விடுமா ?

தாதா :—அதெப்படி முடியும்! பல ஈக்கள் கூடித் தான் கட்டவேண்டும்.

மா :— ஈக்கள் ஏன் தேனைச் சேர்த்து வைக்கின்றன ?

தாதா :— பிறகு உண்பதற்காகத்தான். ஆனுல், அதை மனிதர்கள் கொள்ளை கொண்டு விடுகிருர்கள்.

மா :— ஆ! சிறிய ஈக்களால்தானே நமக்கு இனிமையான தேன் கிடைக்கிறது ?

தாதா :— ஆம் ; இதற்கு ஒரு விடுகதையும் சொல்லுகிறேன் பார்.

மா :—விடுகதையா ? ஏதோ சொல்லுங்கள் !

தாதா :—ஆயிரம் பேர் கூடி அழகான கோட்டை கட்ட ஒருவன் கண்பட்டு உடைந்ததாம் அப்போதே.

மா:—ஆமாம்; தாதா, பொருத்தமாய் இருக்கிறது. இருட்டாகிறதே. வீட்டுக்குப் போகலாமா ?

தாதா:—வா போகலாம். [இருவரும் திரும்பி வீட்டுக்கு வந்தார்கள்]

பயிற்சி 23

விளக்கம்:—ஈ + ஐ = ஈயை. சொல்ல + இல்லை = சொல்லவில்லை. மா + தோப்பு = மாந்தோப்பு. கூடு + ஐ = கூட்டை. தேன் + ஈ = தேனீ. அது + எப்படி = அதெப்படி.

பெரிய எழுத்துள்ள மொழிகளை நீக்கி எதிர்மொழியை அமைக்க.

மாதிரி :—[நல்ல பிள்ளையை நம்பு × கெட்ட பிள்ளையை நம்பாதே]

1. ஈயினால் நமக்கு எவ்வளவோ தீமைகள் ஏற்படும்.
2. ஈயினால் நமக்கு நன்மைகளும் உண்டு.
3. பல மலரில் தேன் உண்டு.
4. இனிப்பான பொருளை யாரும் கொள்ளுவார்கள்
5. ஈயினால் மனிதர்க்கு களிப்பைத் தரும் இன்பம் ஏற்படும்.

பெயர், வினை, ஒருமை, பன்மை எடுத்து எழுது.

மலர்களில் இருக்கிற தேனைத் தேனீ வருந்தித் தேடி எடுத்துச் சென்று கூட்டில் வைக்கிறது. மனிதர் வருத்தம் இல்லாமல் கூட்டை அழித்துத் தேனை எடுத்துக்கொள்கிறார்கள்.

. இது முற்றுப்புள்ளி. இதை முடிந்த தொடரின் முடிவில் அமைக்கவேண்டும்.

வேண்டிய இடத்தில் முற்றுப்புள்ளி வை.

மாணிக்கமும் தாதாவும் ஒருநாள் வெளியே போனார்கள் அங்கே இருந்த ஒரு தோப்பில் நுழைந்தார்கள் தாதா தேன் கூட்டை

மாணிக்கத்துக்குக் காட்டினர் மாணிக்கம் தேனீயைப்பற்றித் தெரிந்து கொண்டான் இருட்டாவதற்குள் இருவரும் திரும்பி வீடு சென்ருர்கள்.

கேள்விகள்.

1. எந்த ஈ நமக்கு நன்மை செய்கிறது?
2. தேன் எதில் உண்டாகிறது?
3. தேனீ எங்கே கூடுகட்டும்?
4. தேன்கூடு எதனுல் கட்டப்படுகிறது?
5. தேன் கூட்டைப் பற்றிய விடுகதை யாது?

---

20. புகை வண்டி

புகை	சக்தி	ஆள்
இரயில்	உத்தியோகஸ்தர்	வகுப்பு
இரும்பு	இஞ்சின்	இடை வகுப்பு
கம்பி	டிரைவர்	மிகுதி
சென்னை	விடவும்	சாயும் இடம்
டிராம்	நிறுத்தவும்	மெத்தை
மின்சாரம்	உத்தரவு	சம்பாதிப்பாய்
நீராவி	கார்டு	அக்கரையாக



மாமன்:—ராமா, நீ எப்போதாவது புகை வண்டியில் ஏறியிருக்கிருயா?

இராமன்:—புகை வண்டியா? அப்படி என்ருல் எனக்குத் தெரியவில்லை மாமா.

மாம:—ஆனுல், ரயில் வண்டி என்ருல் உனக்குத் தெரியும் அல்லவா!

இரா:—ஆம்; அது தெரியும்.

மாம:—ரயிலுக்குத்தான் புகை வண்டி என்று பெயர்.

இரா:—ஏன் அதற்குப் புகை வண்டி என்று பெயர் வந்தது?

மாம:—அது போகும்போது புகையை விட்டுக் கொண்டு போகிறதல்லவா! ஆகையினுல்தான் அப் பெயர் வந்தது.

இரா:—சரிதான், நான் புகை வண்டி ஏறியிருக் கிறேன்.

மாம:—புகை வண்டிக்கும் மற்ற வண்டிக்கும் என்ன வேறு பாடு சொல்.

இரா:—புகை வண்டி இரும்புக் கம்பியின் மீது தான் போகும்; மற்ற வண்டிகள் எங்கும் போகும்.

மாமா :—அப்படியா, இரும்புக் கம்பிமேல் போகும் வண்டி வேமுென்றும் இருக்கிறது. அது உனக்குத் தெரியாது.

இரா :—தெரியும்; சென்னேயில் பார்த்தேன்; அதன் பெயர் டிராம். அதை மின்சார வண்டி என் றும் சொல்லலாம்.

மாமா :—ஆம், மெய்தான். புகைவண்டி எதன் வேகத்தால் ஓடுகிறது ?

இரா :—அது நீராவியின் சக்தியால் ஓடுகிறது.

மாமா :—அதில் உள்ள உத்தியோகஸ்தர்கள் உனக்குத் தெரியுமா ?

இரா :—தெரியும் மாமா, இஞ்சினே ஓட்டுகிறவர் 'டிரைவர்' வண்டியை விடவும் நிறுத்தவும் உத்தரவு செய்பவர் 'கார்டு'.

மாமா :—இரயிலில் யாரும் ஏறிப் போகலாம் அல்லவா ?

இரா :—அது முடியாது; பணம் கொடுத்து டிக்கட் வாங்கினவர்கள் ஏறிச் செல்லலாம்.

மாம :—இரயிலில் எத்தனே விதம் உண்டு என்று உனக்குத் தெரியுமா ?

இரா :—அது எனக்குத் தெரியாது மாமா.

மாம :—சுமை ஏற்றும் வண்டி, ஆள் ஏறும் வண்டி என்று இருவகை உண்டு. ஆள் ஏறும் வண்டியில் பலவித பெட்டிகள் உண்டு.

இரா :—மாமா, நானும் அப்பாவும் ஒரு நாள் ரயில் ஏறப் போனேம்; அந்த ரயிலில் ஒரு அழகான பெட்டி இருந்தது. அதில் நான் ஏறப் போனேன். "அதில் நாம் ஏறக் கூடாது" என்று அப்பா சொன்னார். அது ஏன் மாமா ?

மாம :—ரயிலில் நான்கு வகைப் பெட்டிகள் உண்டு. அவை முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, இடை வகுப்பு, மூன்ரும் வகுப்பு. குறைந்த பணம் கொடுத்தவர்கள் மூன்ரும் வகுப்பில் ஏறவேண்டும். அதைவிட இடை வகுப்புக்குப் பணம் அதிகம். அதிலும் இரண்டாம் வகுப்புக்கு மிகுதி. இன்னும் முதல் வகுப்புக்கு மிக அதிகம்.

இரா :—ஏன் அவைகளுக்கு மாத்திரம் பணம் அதிகம் ?

மாம :—அப் பெட்டிகள் சுத்தமாய் இருக்கும். உட்காரும் இடத்திலும் சாயும் இடத்திலும் மெத்தை இருக்கும். மின்சார விசிறிகள் காற்றை வீசிக் கொண்டே இருக்கும்.

இரா :—மாமா, நாம் ஒரு நாளைக்கு உயர்ந்த பெட்டியில் ஏறிச் செல்லலாமா ?

மாம :—நீ கெட்டிக்காரனுகப் படித்தால், உத்தியோகம் கிடைக்கும்; பணம் அதிகம் சம்பாதிப்பாய்; அப்போது அந்தப் பெட்டியில் ஏறி ஏகலாம்.

இரா :—ஆனுல், நான் அக்கரையாகப் படிப்பேன்.

மாம :—சரி. அப்படியே செய்.

பயிற்சி 24.

விளக்கம் :—எப்போது + ஆவது = எப்போதாவது. வண்டி + இல் = வண்டியில். போகிறது + அல்லவா = போகிறதல்லவா. வேறு + ஒன்றும் = வேறென்றும். இரண்டு + வகை = இருவகை. அக்கரை + ஆக = அக்கரையாக.

பெரிய எழுத்துள்ள மொழியை நீக்கி எதிர்மொழியை அமைக்க

1. நான் வண்டியில் ஏறினேன்.
2. புகைவண்டி வேகமாக ஓடும்.
3. நானும் அப்பாவும் ஏறிப்போனேம்.
4. படித்தவனுக்கு உத்தியோகம் கிடைக்கும்.
5. நான் அக்கரையாகப் படிப்பேன்.

கேள்விகள்.

1. ரயில் வண்டியின் வேறொரு பெயர் யாது ?
2. ரயிலுக்குப் புகைவண்டி என்ற பெயர் ஏன் வந்தது ?
3. புகைவண்டி எதன்மீது போகும் ?
4. கம்பியின்மேல் போகும் வேறுவண்டி எது ?
5. ரயிலில் உள்ள உத்தியோகஸ்தர்கள் யார் ? அவர்களுடைய வேலைகள் எவை ?
6. ரயிலில் எத்தனைவகைப் பெட்டிகள் உண்டு ?
7. இராமன் எதற்கு ஆசைப்பட்டான் ?

KESARI PRINTING WORKS, MADRAS.